



නාවෙලි NAAVELI
# நாவெளி
நாவிதன்வெளி பிரதேச செயலக மாதாந்த மின்னிதழ்
නාවිදන්වෙලි ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලයේ මාසික ඉ - සඟරාව
NAVITHANVELI DIVISIONAL SECRETARIAT MONTHLY E-MAGAZINE






www.navithanveli.ds.gov.lk moha.divi.navithanveli@gmail.com DSNavithanveli 0755424333



மலர்: 13 ✦ இதழ்:21 ✦ 2025ஆம் வருடம் தை மாதம் இருபத்தைந்தாம் திகதி


## 2025ஆம் ஆண்டின் கடமைச் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு



2025ஆம் ஆண்டின் முதலாம் அலுவலக நாளாகிய 2025.01.01ஆந் திகதியன்று இந்த ஆண்டின் கடமைச் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வுகள் பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது. பிரதேச செயலாளர் அவர்களினால் தேசியக்கொடி ஏற்றப்பட்டு நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் தேசிய கீதமும் ஒலிக்கச் தொடர்ச்சி 08ஆம் பக்கம்...

## தையல் மற்றும் மனையியல் டிப்ளோமா பயிற்சி நெறிக்கான புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு



கிராம அபிவிருத்தி திணைக் களத்தினால் நடாத்தப்படும் தையல் மற்றும் மனையியல் டிப்ளோமா பயிற்சி நெறிக்காக 2025ஆம் ஆண்டிற்கான புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வானது நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் 2025 ஜனவரி 06ஆந் திகதியன்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் நாவிதன்வெளி தொடர்ச்சி 08ஆம் பக்கம்...

## வேலை வாய்ப்பற்ற இளைஞர் யுவதிகளுக்கான தொழிற்சந்தை



மனிதவலு வேலை வாய்ப்புத் திணைக்களத்தினால் நடைமுறைப் படுத்தப்படும் 2025ஆம் ஆண்டிற்கான நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட தொடர்ச்சி 08ஆம் பக்கம்...

## Clean Sri Lanka வேலைத்திட்டம் பற்றிய அரசதுறை உத்தியோகத்தர்களுக்கான தெளிவூட்டல்



இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அவர்களின் எண்ணக்கருவிற்கு அமைவாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள Clean Sri Lanka வேலைத்திட்டம் தொடர்பில் தொடர்ச்சி 08ஆம் பக்கம்...

## அஸ்வெசும பயனாளிகளை தெரிவு செய்வதற்கான கணக்கெடுப்பு ஆரம்பம்



நலன்புரி நன்மைகள் சபையினால் முன்னெடுக்கப்படும் "அஸ்வெசும" நலன்புரி கொடுப்பனவினை பெற்றுக் கொள்வதற்கான 2ஆம் கட்ட பயனாளிகளை தெரிவு செய்வதற்கான கணக்கெடுப்பு பணிகளின் ஆரம்ப நிகழ்வானது நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் தொடர்ச்சி 08ஆம் பக்கம்...

## ஆசிரியரிடமிருந்து...

நாவெளி மலர் - 13இல் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் அளவற்ற மகிழ்ச்சி. ஒரு வருடம் கடந்த நிலையில், இவ்வருடத்தின் முதல் மலராக பல்வேறு செய்திகள், மற்றும் பல்சுவை அம்சங்களைத் தாங்கிய வகையில் நாவெளி மலர் - 13 இம்மாதமும் உங்களுக்காக வெளி வருகின்றமை மகிழ்வளிக்கின்றது. இத்தகைய மகிழ்வினைத் தந்து கொண்டிருக்கும் "நாவெளி" இன் சொந்தங்கள் அனைவருக்கும் இதயம் கனிந்த நன்றிகளும், பாராட்டுகளும் உரித்தாகட்டும்.

அரச அதிகாரிகளுக்கும், பொது மக்களுக்கும் இடையில் நம்பிக்கையை வளர்ப்பதில் வெளிப்படைத் தன்மை, மற்றும் பொறுப்புக் கூறல் என்பன இன்றியமையாத கூறுகளாகும். அதிகாரிகள் தாம் செல்வாக்கு செலுத்துகின்ற செயல்முறைகள் மற்றும் முடிவுகளைப் பற்றி வெளிப்படையாக இருக்கும் போது மக்கள் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். அரசாங்க அதிகாரிகள் அவர்களின் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் அவர்களின் முடிவுகளுக்கு பின்னால் உள்ள நியாயத்தை விளக்கி, அவர்களின் தகவல் தொடர்புகளில் தெளிவாக இருக்க வேண்டும். இது குடிமக்கள் அமைப்பைப் புரிந்து கொள்ள உதவுகிறது மற்றும் குழப்பம் விரக்தி, மற்றும் அநீதி உணர்வுகளைக் குறைக்கின்றது.

மேலும் அதிகாரிகள் தங்கள் செயல்களுக்கு பொறுப்பேற்க வேண்டும். பொது சேவைகள் வழங்குவதில் தாமதங்கள் அல்லது தவறுகள் இருந்தால் அதிகாரிகள் அவற்றை வெளிப்படையாக ஒப்புக் கொண்டு பொறுப்பேற்க வேண்டும். பயன்பாடுகள், விசாரணைகள் அல்லது சேவைகளின் முன்னேற்றம் குறித்த நேர்மையான புதுப்பிப்புகளை வழங்குவது மக்களின் எதிர்பார்ப்புகளை நிர்வகிக்க உதவும். அதிகாரிகள் தாங்கள் எதிர் கொள்ளும் சவால்கள் மற்றும் அரச நிருவாக அமைப்பின் வரம்புகள் குறித்து வெளிப்படைத் தன்மையுடன் இருக்கும் போது அவர்கள் பொது மக்களிடமிருந்து புரிதலையும், ஆதரவையும் பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

அரசு அலுவலர்கள் தங்கள் கடமைகளைத் தொழில் வாண்மைத்துவம் மற்றும் கடமை உணர்வுடன் அணுக வேண்டும். இதன் பொருள் நிறுவப்பட்ட வழிகாட்டுதல்களை பின்பற்றுவது. அவர்கள் செயல்படுத்தும் கொள்கைகளைப் பற்றி நன்கு அறிந்து இருப்பது மற்றும் அவர்களின் வகிபாகங்களில் உயர் மட்டத் திறனைப் பேணுதல் என்பவை ஆகும். வாண்மைத் துவம் என்பது மரியாதையானதாயும், உரிய நேரத்திற்கு செயற்படுவதாயும் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்டதாயும் இருப்பதையும் உள்ளடக்கியது. அரசாங்க சேவைகள் விரைவாகவும் திறமையாகவும் வழங்கப்பட வேண்டும் என்று குடிமக்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பதால் இந்த எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்ய அதிகாரிகள் முயற்சி செய்ய வேண்டும்.

அரசாங்க செயல்முறைகள் மீதான பொதுமக்களின் விரக்தியை குறைப்பதில் சேவை வழங்கலில் உள்ள செயல்திறன் மிகவும் முக்கியமானது. நீண்ட வரிசைகள் தேவையற்ற தாமதங்கள் மற்றும் சிக்கலான நடைமுறைகள் ஆகியவை பெரும்பாலும் குடிமக்களை ஏமாற்ற மடையச் செய்கின்றன. அரசு அலுவலர்கள் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட மனநிலையைக் கடைப்பிடிக்க வேண்டும். செயல் முறைகளை சீரமைக்கவும், பொதுமக்கள் எதிர் கொள்ளும் பொதுவான சவால்களுக்கு தீர்வு காணவும் முனைப்புடன் செயல்பட வேண்டும்.

இது தொழில்நுட்பத்தின் பயன்பாடு, சிறந்த தகவல் தொடர்பு உத்திகள் போன்றவற்றை உள்ளடக்கியதாக அமைவதுடன் அரசாங்க சேவைகளை எவ்வாறு இலகுவாகப் பெற்றுக் கொள்வது என்பது பற்றிய தெளிவான வழிகாட்டுதலை பொதுமக்களுக்கு வழங்குவதையும் உள்ளடக்கும்.

**என்றும் அன்புடன்**
**ஆசிரியர்.**



## வாழ்க்கைத் தத்துவங்கள்

** எத்தனை துன்பங்கள் பகைவர்களால் வந்தாலும், அதை அன்பாலேயே வென்று விடுங்கள்.*

** துன்பங்களுக்கு இடையில்தான் வாய்ப்புகள் ஒளிந்திருக்கின்றன.*

** அன்புதான் உன் பலவீனம் என்றால், இந்த உலகின் மிகச்சிறந்த பலசாலி நீதான்.*

** விட்டுக் கொடுங்கள், விருப்பங்கள் நிறைவேறும். மன்னிப்பு கொடுங்கள், தவறுகள் குறையும். மனம்விட்டு பேசுங்கள், அன்பு அதிகமாகும்.*

** உன் அன்பின் தன்மைக்கு ஏற்றபடி உன் செயல்கள் இருக்கும், உன் செயல்ளுக்கு ஏற்றபடி உன் வாழ்க்கை இருக்கும்.*

** உன் மனம் வலிக்கும்போது சிரி, பிறர் மனம் வலிக்கும்போது சிரிக்கவை.*

** நீ ஒழுக்கம் உள்ளவனாக இருந்தால் கவலையே வராது, நீ அறிவாளியாக இருந்தால் குழப்பம் வராது, நீ துணிவுள்ளவனாக இருந்தால் அச்சம் வராது.*

** கஷ்டப்படுபவனிடம் சிரிப்பு இருக்காது, சிரிப்பவனிடம் கஷ்டம் இருக்காது, ஆனால் கஷ்டத்திலும் சிரிப்பவனிடம் தோல்வி இருக்காது.*

** சந்தோசத்தை மட்டுமே நம்மை சுற்றி உள்ளவர்களுடன் நாம் பகிர்ந்து கொள்ள வேண்டும். கஷ்டம் வருகின்ற போது தனியாக நின்று ஜெயிப்பவனே மனிதன்.*

# ஒரு செழிப்பான தேசம் ஒரு அழகான வாழ்க்கை

திட்டமிடல் பிரிவு - பிரதேச செயலகம், நாவிதன்வெளி.






இலங்கையின் சனாதிபதி அலுவலகத்தினால் இந்த புதிய வருடமான 2025ஆம் ஆண்டு நாடு பூராகவும் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு செயற்திட்டமே Clean Sri Lanka செயற்திட்டமாகும். ஜனாதிபதியின் விஷேட செயலணி ஊடாக Clean Sri Lanka செயலகம் அமைக்கப்பட்டு 24 மாகாண சபைகள், மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்களை உள்ளடக்கியதாக கிராமிய மட்டத்திலும் இந்த நிகழ்ச்சித் திட்டமானது கொண்டு செல்லப்படும். இத்திட்டத்தின் ஊடாக பிரதானமாக மூன்று விடயங்களை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. முதலாவதாக, கிராமிய மட்டங்களில் வறுமையைத் தணித்தல் (Alleviation of Rural Poverty), இரண்டாவதாக, மின்னணுப் பொருளாதாரம் (Digital Economy) மற்றும் இறுதியாக, சுத்தமான இலங்கை (Clean Sri Lanka)போன்றனவாகும்.

எம்நாட்டில் ஏற்படுகின்ற அனர்த்தங்கள், ஆட்கொல்லி நோய்கள், குற்றங்கள், முரண்பாடுகள் மற்றும் பாகுபாடுகள் அனைத்தையும் இனங்கண்டு அவற்றுக்கான தீர்வை பெற்றுக் கொடுத்து தொடர்ச்சியான நடை முறைகளைப் பேணும் பொழுது நாட்டினையும் நாட்டு மக்களையும் ஓர் அழகான வாழ்க்கைக்கு இட்டுச் செல்ல முடியும். இன்றைய கால கட்டத்தை பொறுத்தவரை மனிதர்களால் ஏற்படுகின்ற வீதி விபத்துகளானது வருடம் ஒன்றிற்கு அண்ணளவாக 2321 ஆக காணப்படுகின்றது. அதேபோன்று இயற்கை அனர்த்தங்களான வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவினால் அண்ணளவாக 475225 பேர் பாதிக்கப்படுகின்றனர். மேலும், உட்கட்டமைப்பு நிர்மாணிப்புக்களில் இடம்பெறுகின்ற மோசடிகள், ஆட்கொல்லி நோய்களாலும் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். மேலும் அண்ணளவாக 9436 சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகின்றனர். அதிலும் வழக்குகள் அதிகமானவை பால்நிலை பாகுபாட்டினை அடிப்படையாக கொண்டவை. இலங்கையின் நீடித்த சமூக கலாசார மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான தேசிய முயற்சியில் மிக முக்கியமான அடிப்படை தூண்களான சமூகம், சுற்றுச் சூழல் மற்றும் ஒழுக்கம் ஆகியன அளப்பரிய பங்காற்றுகின்றன. ஏன் நாம் நாட்டினை சுத்தப்படுத்த வேண்டும் என்ற கேள்விக்கு இம்மூன்று தூண்கள் வாயிலாக பதிலளிக்க முடியும். சமூகம் சார்ந்து பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும். அவையாவன, அரசாங்கத்தின் மீதான மக்களின் எதிர்மறையான எண்ணப்பாங்குகள், மோசமான உணவுக் கலாசார செய்கைகள் மற்றும் ஆரோக்கியமற்ற வாழ்க்கை, அசௌகரியமான ஓய்வற்ற வெறுப்பூட்டும் வாழ்கை முறைகள் போன்றன உயர் பாதிப்பைக் கொண்டுள்ளன.

அதேபோல் சுற்றுச் சூழல் ரீதியிலான காரணிகளாக நிலம், நீர், மற்றும் காற்று மாசடைதல், குறைவான தரத்தைக் கொண்ட பொது இடங்கள், தரம் குன்றிய வளப்பயன்பாடுகள், குற்றங்களின் அதிகரிப்பு, மற்றும் அதிகரித்து வருகின்ற நோய் பரவல்களையும் இனங்காண முடிகின்றது. மேலும், ஒழுக்கம் சார்ந்து உற்று நோக்குகையில் அனுதாபமின்மை, பரஸ்பர மரியாதை இன்மை, மற்றும் சுற்றுச் சூழல் தொடர்பான அலட்சியமான போக்குகளையும் காண முடிகின்றன. எனவே, இங்கு குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு காரணிகளையும் இல்லா



தொழித்து சுத்தப்படுத்துவதன் மூலம் நாம் ஒரு அழகிய தேசத்தையும், மனிதாபிமானம் மிக்க பிரஜைகளையும் கட்டியெழுப்ப முடியும். அத்தோடு இதில் மக்களின் நடத்தை சார் விடயங்களில் விஷேட கவனம் செலுத்த வேண்டும்.

மக்களின் நடத்தை மாற்றத்தை பின்வரும் செயன்முறை ஊடாக நாம் முன்னெடுக்க முடியும். இம் மாற்றமானது ஒரு தனிநபரிடம் இருந்து ஆரம்பிக்கின்றது. அதாவது ஒரு தனிநபரின் அறிவு, ஆளுமை, மனப்பாங்கு மற்றும் நடத்தை ஊடாக வெளிப்படுத்தப்படுகின்றது. இவ்வாறாக தனி நபரிடமிருந்து இன்னொருவருக்கு கடத்தப்படுகின்றது. எவ்வாறெனில் நண்பர்கள், குடும்பம் மற்றும் சமூக வலையமைப்புகள் போன்றவைகளினூடான மாற்றம். அடுத்த படிநிலையாக நடத்தை மாற்றமானது நிறுவனத்திற்குள் ஊடுருவப்படுகின்றது. உதாரணமாக, நிறுவனங்கள், பாடசாலைகள் மற்றும் வேலைத் தளங்கள். அதேபோன்று இச் செயன்முறை சமூகத்திற்குள் நகரங்கள், அதை அண்மித்த பிரதேசங்கள், வளங்கள் மற்றும் வழக்காறுகள் வாயிலாகவும் நகர்கின்றது. இறுதியாக நடத்தை மாற்றமானது சட்டங்கள் மற்றும் முழுமையான நெறிமுறைகள் மூலம் கொள்கை எனும் செயன்முறை ஊடாக நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தலுக்கு உட்படுத்தப் படுகின்றது.

நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மிகவும் தரம் மிக்கதாக மாற்றுவதற்கு மக்களை உத்வேகப்படுத்தல், உரிய வழிகாட்டுதல்களை மேற்கொள்ளல், மாற்றத்திற்கான அவசியத்தை வலியுறுத்தல் மற்றும் உதாரணங்களை எடுத்துரைத்தல் போன்ற நடை முறைகளை பழக்கப்படுத்திக் கொள்வது அவசியமான ஒன்றாகும். மேலும் இந்த செயற்றிட்டத்தின் தூரநோக்கு "அழகான தீவு சிரிக்கும் மக்கள்" என்பதாகும். பணிக்கூற்று "சுற்றுச்சூழல், சமூக மற்றும் நெறிமுறை முயற்சிகளின் நாடு தழுவிய முயற்சிகளை மீண்டும் நிலைநிறுத்தல்" என்பதாகும். இம் மொழியப்பட்ட செயற்றிட்டத்தின் குறிக்கோள், பின்வருமாறு,

உத்வேகம் வழிகாட்டுதல் மற்றும் மாற்றத்திற்கான அவசியத்தை வலியுறுத்துவதன் மூலம் இலங்கை சமூகத்தில் நேர்மறையான நடத்தை மாற்றங்களை ஊக்குவித்தல், பொது இடங்கள் மற்றும் பொதுவான சொத்துக்களை தரப்படுத்தப்பட்ட நிலைக்கு உயர்த்துவதன் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல், சமூக நெறிமுறை மற்றும் சுற்றுச்சூழல் அணுகு முறைகள் மூலம் இலங்கையை ஒரு வளர்ந்த நாடாக மீண்டும் நிலை நிறுத்துவதற்கு நாட்டிற்குள் முயற்சி களை எளிதாக்குதல் மற்றும் ஒருங்கிணைத்தல், இலங்கை சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் அங்கீகரிக்கப்பட்ட விழுமியங்கள் மற்றும்நெறிமுறை கோட்பாடுகளை நிறுவுவதன் மூலம் மகிழ்ச்சியான, அமைதியான தேசத்தை உருவாக்குதல் போன்றனவாகும்.

முதலாவது தூணான சமூகத்திற்கான செயற்றிட்ட விடயங்களாக பின்வருவனவற்றை உதாரணங்களாக எடுத்துக் கொள்ளலாம். சுத்தமான மற்றும் பாதுகாப்பான வீதிகளை அமைத்தல், தரம் மிக்கதும் பாதுகாப் பானதுமான உணவுகள் மற்றும் சுத்தமான மலசலகூட வசதிகளை மேம்படுத்தல். ஒழுக்கம் சார்ந்த ஒற்றுமை, சுயமேன்மை மற்றும் நம்பிக்கை போன்றவற்றை உள்ளடக்கி யதாக 10 கோட்பாடுகளை (ஐக்கியம், சுயமரியாதை, பொறுப்புக்கூறல், நம்பிக்கை, யாதார்த்த பூர்வமாக சிந்தித்தல், சிக்கனம், வெளிப்படைத் தன்மை, சமத்துவம், இணைவு, நேர்மைத்தன்மை) கடைப்பிடித்தல். அத்தோடு ஒழுக்கம் சார்ந்து ஊழலற்ற நிலையை ஊக்குவித்தல், சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு அதிகாரமளித்தல் போன்ற செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும். சுற்றுச்சூழல் சார்ந்து அனைத்து பொது இடங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் மற்றும் அலுவலகங்களைச் சுத்தப் படுத்தல், பயிற்சிகளையும் பாசறை களையும் வழங்குதல் மற்றும் தேசிய E-waste சேகரித்தல் தொடர்பான பயிற்சிப்பாசறைகளை வழங்குதல் ஆகியவற்றையும் வலியுறுத்துகின்றன. மேலும் இச்செயற்றிட்டத்தில் "Colla boration of 4P's" என்ற எண்ணக் கருவானது பிரதான வகிபாகத்தைக் கொண்டுள்ளது. (The 4P's: Public Sector, Private Sector, People & Partnerships) இவ் எண்ணக் கருவானது குறித்த நடைமுறைப் படுத்தல் பொறிமுறை (Implementation Mechanism) செயல் ஒன்றினூடக முறைப்படுத்தப்படுகின்றது.



# அதி உச்ச பாதுகாப்பிற்கு மத்தியில் பதவிப்பிரமாணம் செய்து கொண்ட டொனால்ட் ட்ரம்ப்

P.RUPAN - DEVELOPMENT OFFICER



அமெரிக்காவின் (US) ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் (Donald Trump) பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார். அமெரிக்காவின் 47வது ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார். வொஷிங்டனில் அமைந்துள்ள கெப்பிட்டல் கட்டடத்தில் இந்த பதவிப் பிரமாண நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் வெளிநாட்டு தலைவர்கள், இராஜதந்திரிகள், தொழில்நுட்ப நிறுவனங்களின் பிரதானிகள், செல்வந்தர்கள், முன்னாள் ஜனாதிபதிகள் என பல்வேறு தரப்பினரும் பங்கேற்றிருந்தனர். இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட் ட்ரம்ப் பிரதம நீதியரசர் ஜோன் ரொபர்ட்ஸ் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். பதவிப் பிரமாண உரையில் அமெரிக்காவின் பொற்காலம் ஆரம்பமாகியுள்ளது எனவும் இன்றைய நாள் முதல் அமெரிக்கா பிரகாசிக்கும் எனவும், உலக நாடுகளில் அமெரிக்காவின் மரியாதை உயரும் எனவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

## ஈரானில் மன்றுக்குள்ளேயே சுட்டுக்கொல்லப்பட்ட நீதியரசர்கள்

ஈரானிய உயர்நீதிமன்றத்தின் மூத்த நீதியரசர்கள் இருவர் தலைநகர் தெஹ்ரானில் சுட்டுக் கொல்லப் பட்டதாக ஈரானின் நீதித்துறை தெரிவித்துள்ளது. உயர்நீதிமன்றத்திற்குள் நீதியரசர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய பின்னர் நீதிபதிகளில் ஒருவரின் மெய்க்காப்பாளர் காயம் அடைந்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. படுகொலைக்கான நோக்கம் இன்னும் தெளிவாகத் தெரியவில்லை எனினும் குறித்த இரண்டு நீதியரசர்களும், நீண்ட காலமாக உளவு பார்த்தல் மற்றும் பயங்கரவாதம் உள்ளிட்ட தேசிய பாதுகாப்பு வழக்குகளை விசாரணை செய்து வந்துள்ளனர். அத்துடன் பல உண்மைகளையும் கண்டறிந்துள்ளனர். இது எதிரிகள் இடையே



கோபத்தையும் வெறுப்பையும் தூண்டியுள்ளதன் அடிப்படையிலேயே அவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று அரச அதிகாரி ஒருவர் சந்தேகம் வெளியிட்டுள்ளார். குறிப்பாக குறித்த வழக்குகள் இஸ்ரேலுடன் தொடர்புடைய தனிநபர்கள் மற்றும் அமெரிக்காவால் ஆதரிக்கப்படும் ஈரானிய எதிர்க்கட்சியுடன் தொடர் புடையவை என்று அரச தொலைக் காட்சி கூறியுள்ளது. எனினும், மேலதிக தகவல்கள் எதையும் அரச கண்டறிந்துள்ளனர். தொலைக்காட்சி வழங்கவில்லை.

## ஒன்றரை வருடங்களுக்கு பின் அமைதிநிலை! இஸ்ரேல் விதித்துள்ள நிபந்தனை

ஏறத்தாழ ஒன்றரை வருடங்களுக்கு பின்னர் இஸ்ரேல் மற்றும் ஹமாஸுக்கிடையில் போர்நிறுத்தம் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில் 33 இஸ்ரேலிய பணயக்கைதிகளின் விடுதலைக்கு பதிலாக 1,890 பலஸ்தீனிய பணயக் கைதிகளை விடுதலை செய்ய இஸ்ரேல் ஒப்பு க்கொண்டுள்ளது. எனினும், விடுதலை செய்யவுள்ள கைதிகளின் பட்டியலை ஹமாஸ் வெளியிடாமல் அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுக்க மாட்டோம் என இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார். இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் தரப்பினருக் கிடையில் (19.01.2025) முதல் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையொட்டி, இந்த கைதிகளின் பரிமாற்றம் இடம்பெற உள்ளதாக போர்நிறுத்த நடுவராக செயற்படும் எகிப்து அரசாங்கம் தெரிவித்துள்ளது. 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 07ஆம் திகதி இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பினர் நடத்திய தாக்குதலில் 1,200 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டதோடு 251பேர் பணயக் கைதிகளாக காசாவிற்கு அழைத்து செல்லப்பட்டனர். இதனை அடுத்து, கடந்த ஒன்றரை ஆண்டுகளாக ஹமாஸ் மீது இஸ்ரேல் நடாத்தி வரும் தாக்குதலில் 46,800 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலின் தாக்குதல்களின் விளைவாக பலஸ்தீனியர்கள் தமது சொந்த இடங்களை இழந்து, ஒன்றரை வருடங்களாக பதுங்கு குழிகளில் வாழ்ந்து வருகின்றனர். உணவு, தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகள் எதுவும் இல்லாமல் வாழ்ந்து வரும் பலஸ்தீனியர்கள் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டதன் பின்னர் தற்காலிகமாக அவர்களின் சாதாரண வாழ்வுக்கு திரும்பவுள்ளனர்.

# தாகம் தீர்ந்தது

# சிறுகதை

அ.சுதர்சன் - வீரமுனை



“இந்த நாசமாய்ப்போன மழை எப்பதான் விடப்போகுதோ தெரியல்ல” என்று சலித்துக் கொண்டே ஒழுகும் வீட்டுக் கூரைத் தண்ணி அறையை நனைத்துவிடக் கூடாதென்பதற்காக சமைக்கும் பானையை கொண்டு வைத்துவிட்டு “எத்தன நாள்தான் உங்கள்ட சொல்லுற கூரைய சரி செய்ங்க, மழைக்காலம் வருது என்று எத்தனை தரம் சொல்லிக்கன், இப்ப பாருங்க அடை மழையும் வந்திட்டு நானும் புள்ளைகளும் இனி தண்ணியிலதான் இருக்கணும் போல எல்லாம் என் தலவிதி” என்று தனது கணவனான ராமசாமியை பார்த்து கூறி புலம்பினாள் நாகம்மாள்.

ராமசாமியை கூலி வேலைக்கு யாரும் அழைத்து கொண்டு சென்றால்தான் அன்றைய நாள் வீட்டு மனையாள் உட்பட பாசத்துக் குரிய இரண்டு பெண் பிள்ளைகளின் வயிறும் நிறையும். தற்போது மழைக்காலம் என்றபடியால் யாரும் வேலைக்கு அழைத்த பாடில்லை.

“இன்டைக்கு ஆக்கிறத்திக்கு ஒண்டும் இல்ல, பிள்ளைகள் வேற பசிய தாங்காதுகள், அதிலையும் கடைக்குட்டி துஷி ஸ்கூள் என்றாலும் பரவாயில்ல அங்கு சாப்பாடு கொடுப்பாங்க, ஆனால் அதுவும் இல்ல லீவு வேற. இப்ப என்னத்த அவிக்கிற என்னத்த சாப்பிடுற…” என்று கனத்த குரலில் கூறிச்சென்றதை காதில் வாங்கிக் கொண்டு பெருமூச்சு விட்டுக்கொண்டு எழுந்த ராமசாமிக்கு தான் கடந்த மாதம் பாண்டிருப்பில் வளவு துப்புரவாக்கும் வேலையில் இருந்தபோது தனது வளவையும் துப்புரவாக்கி தந்தால் காசு தருவதாக கூறிய ஒருவரின் ஞாபகம் வரவே. “இன்றைக்கு சாப்பாட்டுக்கு ஏதோ ஒரு வழி செய்றன்” என்று எழுந்தான். ஓடிவந்து அவனது கழுத்தை கட்டிணைத்த மகள் துஷி “அப்பா எனக்கு இனிப்புப் பாண் வாங்கி வாங்கப்பா” என அன்புடன் கூற “எனக்கும் அது வேண்டும்” என்று மூத்த மகள் வாசுகியின் குரலும் ஒலித்தது. சரி மக்காள் இருவருக்கும் இனிப்புப் பாண் வாங்கிற்று வாறன், நாகம்மை உனக்கும் எனக்கும் சாப்பாட்டு பார்சல்வாங்கி வாறன் இன்டைக்கு சமைக்காத” என்று கூறி ஏதோ ஒரு நம்பிக்கையில் தனது சைக்கிளை எடுத்தார்.

தூறல் மழையில் கிட்டங்கியைத் தாண்டி செல்லும்போது சைக்கிளின் மிதிப்பான்வரை தண்ணீர் வெள்ளம் சென்றது. மெல்லச் சென்று மறு கரையை அடைந்து பாண்டிருப்பு வீட்டை அடைந்ததும் வீட்டு கதவு பூட்டியிருந்தது. “ஐயா நான் ராமசாமி வந்திருக்கன் ஏதாவது வேலை இருக்கா…?” மெல்ல கதவை திறந்து “ஆஆஆ….இப்பானா நேரம் கிடைத்த சரி சரி வந்து வீட்டுக்கு பின்னால இருக்கிற பத்தைகளையெல்லாம் கொத்தி துப்புரவாக்கு” என்ற பதிலை கேட்டதும், தூறல் மழை என்றும் பாராது உடனே வேலையை ஆரம்பித்தார் ராமசாமி, பற்றைகளை கொத்தியபோது மண்வெட்டி தனது காலை பதம்பார்த்துவிட்டதால் ஒழுகிய இரத்தத்தை கூட பொருட்படுத்தாது வேலையை மதியத்துக்குள் முடித்தால் தனது வீட்டார்களின் வயிறு நிறையும் என்ற ஒரே நோக்கத்தோடு நனைந்து நனைந்து வேலைசெய்து முடிக்க மணி இரண்டு ஆகிவிட்டது.

நனைத்த கோலத்துடன் “ஐயா வளவை சுத்தம் செய்துவிட்டேன்” “ஆஆ சரி நல்லா செய்தாயா… இல்ல பிறகு வரவேண்டும் என்பதற்காக வேரை அடியோடு கொத்தாம, மேலால் கொத்தினாயா…?

இல்ல ஐயா…நல்லா ஆழமாக கொத்தி துப்பரவு செய்திட்டன்…” “சரி..சரி இந்தா பணம்” என ஐநூறு ரூபாயை எடுத்து நீட்டினார்” “ஐயா கொஞ்சம் பாத்து போட்டு கொடுங்க வீட்ட பிள்ளை குட்டிகள் இதைத்தான் நம்பி இருக்கு”

“அவ்வளவுதான் அரைத்தியால வேலைதானே… இந்தப் பணம் போதும், போ…” என அதட்டினார். கையில் ஐநூறு ரூபாயுடன் போய் கல்முனை கடையில் இனிப்பு பாண் துண்டுகள் இரண்டையும் ஜேம் போத்தலையும் வாங்கியதும் முன்னூறு ரூபாய் செலவாகியதும் மீதி இருந்த இருநூறு ரூபாயையும் கொடுத்து தனக்கும் மனைவிக்கும் சேர்த்து ஒரே ஒரு சாப்பாட்டு பார்சலையும் வாங்கிவிட்டு பிள்ளைகள் மனைவி பசி பட்டினியுடன் இருப்பார்கள் என தனது மனதுக்குள்ளேயே எண்ணி சைக்கிளில் விரைந்தார். கிட்டங்கி பாலத்தை அண்மித்ததும் சைக்கிளின் இரு சக்கரங்களின் காற்றும் போய்விட்டது.

பாலத்தில் தண்ணீர வெள்ளம் செல்ல சாறனை மடித்து கட்டிப் பாலத்தை நோக்கி சைக்கிளை உருட்டினார்.

“அண்னே தண்ணீ வெள்ளத்தால் இழுக்கிறது… நீங்கள் போக வேண்டாம், வாருங்கள் என்றனர் சிலர். சிலர் “இல்லை அண்ணே நடந்து போகலாம் வாகனங்கள்தான் போக இயலாது…” என்றனர். இவர்களின் எந்த குரலும் ராமசாமியின் காதுகளுக்கு எட்டவில்லை. எப்படியாவது இந்த இரண்டு இனிப்பு பாண் துண்டுகளையும் தனது பிள்ளைகளிடம் சேர்த்து அவர்கள் பசியை ஆற்றினால் போதும். என்ற எண்ணம் மட்டுமே அவரிடம் குடி கொண்டிருந்தது.

வெள்ளம் வந்த கிட்டங்கி பாலத்தின் அரைவாசி தூரத்தை கடந்திருப்பார் திடீரென உயர்ந்த வெள்ளம் ராமசாமியை இழுக்க கையிலிருந்த சைக்கிளை விட்டுவிட்டார். நீர் இழுத்த வேகத்தில் சைக்கிள் வெள்ளத்தில் மூழ்கியது. இரண்டு பாண் துண்டுகளையும் இறுக்கமாக பிடித்துக் கொண்டு அடிமேல் அடிவைத்து பாதத்தை ஊன்றி நடந்தார். கால்களை தண்ணீர் இழுத்து இழுத்துத் தாக்கியது… இன்னும் சில அடிகள் வைத்தால் கரை வந்துவிடும் என எண்ணிய மறுகணமே கால்கள் பாசியில் வழுக்கியன, வேகமாக வந்த தண்ணீர் அவரை இழுக்கவே நிலை தடுமாறி வெள்ளத்தில் மூழ்கினார் ராமசாமி. நொடிப்பொழுதில் இழுத்த தண்ணீர் அவரின் உயிரைக் காவு கொண்டு அவரது கைகளிலிருந்த பாண் துண்டுகளை அடித்துச் சென்றது.

நீரில் இரண்டு பாண் துண்டுகளும் மிதந்து கொண்டிருக்க ராமசாமியை மட்டும் உண்டு தனது பசியை தீர்த்துக் கொண்டது கிட்டங்கி பாலம். தந்தையின் வருகையை பார்த்த வண்ணம் இருந்த பிள்ளைகளின் பசியோ எதிர்பார்ப்புடன் நீண்டது.

முற்றும்...

நாவெலி NAAVELI நாவெளி

பொருண்மியம்

பிரதேச செயலகம் - நாவிதன்வெளி - Divisional Secretariat - Navithanveli



# One Village - One Product வேலைத்திட்டம்

ப.தமிழ்வாணன் - பிரதேச செயலகம் நாவிதன்வெளி

சமுர்த்தி வேலைத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட நிவாரணம் வழங்கும் செயற்பாடுகள் சமூக நலன்புரி நன்மைகள் சபையின் கீழ் உள்ளடக்கப்பட்டதுடன் அஸ்வசும பயனாளிக் குடும்பங்களை வலுவூட்டும் ஆரம்பக் கட்டப் பொறுப்புகள் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் அஸ்வசும பயனாளியாக இனங்காணப்பட்ட 12 லட்சம் குடும்பங்களை மூன்று வருடங்களுக்குள் வலுவூட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களில் மூன்று லட்சம் குடும்பங்களை இந்த ஆண்டில் வலுவூட்டுவதற்கான ஆரம்ப வேலைகள் முடிவடைந்துள்ளன.

வலுவூட்டச் செய்யும் பணிகளின் பொருட்டு பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்த திட்டமிடப்பட்டுள்ளதுடன் 2016ஆம் ஆண்டிலிருந்து சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப் பட்ட சமுர்த்தி உற்பத்தி மாதிரிக் கிராம வேலைத்திட்டத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த வேலைத்திட்டத்தினை நடைமுறைப் படுத்த உத்தேசித்துள்ளது. இங்கு ஒரே வகையான உற்பத்திகளை மேற்கொள்கின்ற அல்லது மேற்கொள்ள உத்தேசித்துள்ள குடும்பங்களை குழுக்களாக ஒழுங்குபடுத்தி இக் கருத்திட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதுடன் ஒரு கிராமத்திற்கு ஒரு உற்பத்தி (one village- one product) என்ற எண்ணக்கரு பயன்படுத்தப்படவுள்ளது.

இந்த மாதிரி கிராம கருத்திட்டத்தில் கிராமத்திற்குள் ஒரு உற்பத்தியினை மேம்படுத்த உத்தேசித்துள்ளதுடன் உள்ளார்ந்த திறன்களைக் கொண்ட ஏனைய கருத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தும் பொருட்டான வாய்ப்புக்கள் உள்ளன.

நாடு பூராகவும் அனைத்து மாவட்டங்களும் உள்ளடக்கப்படுகின்ற வகையில் 122 கிராமங்களில் ஆரம்பிக்க திட்மிடப்பட்டு உள்ளதுடன் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கையினை அடிப்படையாகக்கொண்டு மாவட்டத்தினுள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கிராமங்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். இங்கு கிராமத்தின் குறித்த கருத்திட்ட அறிக்கையின் பொருட்டு அண்மிய கிராமங்களில் உள்ள உள்ளார்ந்த திறன்களையுடைய பயனாளி களையும் தொடர்பு படுத்திக்கொண்டு கொத்தணிக் கிராமங்கள் (Cluster Village) என அபிவிருத்தி செய்யப்படவும் உள்ளது.

சமுர்த்தி மாதிரி கிராம வேலைத்திட்டத்திற்கு மேலதிகமாக கருத்திட்டங்களின் பொருட்டு நடைமுறையிலுள்ள உள்ளார்ந்த திறன்களை கவனத்திற்கொண்டு ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி உதவி வேலைத்திட்டத்தின் கீழ் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டு தெரிவு செய்யப்படாத பிரிவுகள் உள்ளடங்குகின்ற பிரகாரம் பரவலான (தனிநபர்) கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் உள்ளது.

## குறிக்கோள்

1.கருத்திட்ட பயனாளிகளின் மாதாந்த தேறிய வருமானத்தினை ஆகக் குறைந்தது 30,000.00 தொடக்கம் 40,000.00 வரை உயர்த்தச் செய்தல்.

2.கிராமத்தில் உள்ள வளங்களின் பொருட்டு முறையான பிரகாரம் சந்தைப் பெறுமதி யொன்றினை பெற்றுக் கொள்ளல்.

3.ஏற்றுமதியை நோக்கமாகவும் இறக்குமதிக்கு மாற்றீட்டு பண்டங்களின் உற்பத்தியை ஊக்குவித்தல்.

4.பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத காணிகள் மற்றும் நடைமுறையில் உள்ள வளங்களை விவசாய மற்றும் கால்நடை வளர்ப்பு கருத்திட்டங்களில் பயன்படுத்திக்கொள்ளல்.

5.விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடி, கைத்தொழில் மற்றும் சேவைகள் ஆகிய துறைகளில் கருத்திட்டங்களை ஊக்குவித்து அதன் பெறுமதிகளை சேர்ப்பதன் ஊடாக கூடுதலான பெறுமதியினை பெற்றுக் கொடுத்தல்.

6. அபிவிருத்தியின் பொருட்டு நடைமுறையில் உள்ள உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சந்தை வாய்ப்புக்களை விரிவுபடுத்தும் பொருட்டு டிஜிட்டல் தளம் ஒன்றினை (Digital Platform) பயன்படுத்திக் கொள்ளல்.

## நடைமுறைப்படுத்தும் முறை

- குடும்ப அபிவிருத்தி திட்டமிடலின் மூலம் கருத்திட்டப் பயனாளிகளின் பொருட்டு பொருத்தமான வாழ்வாதார வழிகளை இனங்கானல் வேண்டும்.

- ஒரே வகையான உற்பத்திகளை மேற் கொள்கின்ற குடும்பங்களை ஒன்றிணைத்துக் கொள்ள வேண்டும்.




- இனங்காணப்படுகின்ற கிராமத்தில் உற்பத்தி, கைத்தொழில் அல்லது சேவையின் பொருட்டு உள்ளார்ந்த திறனொன்று இருக்க வேண்டும் என்பதுடன் அவை ஒரே வகையானதாக இருக்கவேண்டும்.

- ஏற்றுமதித்திறன் ஒன்று அல்லது இறக்கு மதிக்கு மாற்றீடு ஒன்றாக கவனத்திற் கொள்ளக்கூடிய உற்பத்தி ஒன்று/கைத்தொழில் ஒன்று/சேவையொன்றினை கொண்டுள்ள கிராமம் ஒன்று அல்லது சந்தைக் கேள்வியுடனான பாரம்பரிய உற்பத்திகள் உள்ள கிராமம் தொடர்பில் கூடுதலான கவனத்தினை செலுத்துதல் வேண்டும்.

- கருத்திட்டத்தின் ஊடாக குறுகிய காலத்திற்குள் நன்மைகளை பெற்றுக் கொள்ளக் கூடியதாகவும் குறித்த கருத்திட்ட பயனாளிகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கான ஆற்றல்களைக் கொண்டதாக இருக்க வேண்டியதுடன் அது நீண்ட கால நிலைபேறான வருமான வழியாகவும் இருத்தல் வேண்டும்.

- 2024ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப் படுகின்ற பிற எவ்வித வேலைத்திட்டத்தின் கீழும் நன்மைகளைப் பெறாத ஒரு குடும்பமாக இருத்தல் வேண்டும்.

- தற்போது உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அல்லது அதன் பொருட்டு உள்ளார்ந்த திறன்களைக் கொண்ட ஆட்களாக இருத்தல் வேண்டும்.

- உள்ளார்ந்த திறன்களைக் கொண்ட பெண்களை அடிப்படையாகக் கொண்ட குடும்பங்களை இனம் காண்பது தொடர்பில் முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

- அனைத்து கருத்திட்ட பயனாளிகளும் அல்லது குடும்ப அங்கத்தவர் ஒருவர் சமுதாய அடிப்படை அமைப்பின் அங்கத்தவர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவின் கீழ் உள்ள கிராம சேவகர் பிரிவுகளில் கடமையாற்றும் சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு குறித்த திட்டம் தொடர்பான சுற்று நிருபம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் திணைக்களத்தின் ஊடான உதவித்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப் படவிருக்கும் இவ் வேலைத்திட்டங்களுக்கான ஒதுக்கீடுகள் கிடைக்கும் பட்சத்தில் பயனாளிகளால் தெரிவு செய்யப்பட்ட திட்டங்களின் ஊடாக சமூக, பொருளாதார, உள ரீதியாக அவர்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்த முடியும் என்பது திண்ணம்.

# போலி படங்கள் குறித்த கவலை இனி இல்லை... *Whats App-ல்* பகிரப்படும் படங்களின் உண்மைத் தன்மையை கண்டுபிடிக்க உதவும் *Google!*

ICT UNIT - DIVISIONAL SECRETARIAT, NAVITHANVELI




**WhatsApp** தற்போது **Google** இன் உதவியுடன் போலியான செய்திகள் மற்றும் பொய்யான தகவல்களை கண்டுபிடிப்பதில் முயற்சி எடுத்து வருகிறது. **Android** பயனர்களுக்கு **Google**ல் படங்களை தேடுவதை **Reverse** செய்வதற்கான திறனை **WhatsApp** சோதித்து வருகிறது. தற்போது இது **WhatsApp** இணைய பதிப்பில் சோதனை செய்யப்பட்டு வருகிறது.

மில்லியன் கணக்கான பயனர்கள் பயன்படுத்தும் மெட்டாவுக்குச் **(Meta)** சொந்தமான முன்னனணி குறுந்தகவல் செயலி **WhatsApp, Google** மூலம் **WhatsApp** இணையப் பயனர்களுக்காக **Reverse Image Search** அம்சத்தை வெளியிட வாய்ப்புள்ளதாக தெரிகிறது. மிகவும் எதிர்பார்க்கப்படும் இந்த அம்சமானது, பயனர்கள் தங்களுக்கு வரும் சந்தேகத்திற்குரிய புகைப்படங்களின் நம்பகத்தன்மையை சரிபார்க்கவும், தவறான தகவல்கள் பரவுவதைத் தடுக்கவும் உதவும்.

இதற்கு முன்பு **WhatsApp** எந்த ஒரு சோதனையும் இல்லாமல் உள்ளடக்கங்கள், படங்கள் மற்றும் காணொலிகளை பிறருக்கு அனுப்புவதற்கு அனுமதித்தது. இதனால் போலியான மற்றும் தீங்கு விளைவிக்க கூடிய விஷயங்கள் பிறருக்கு பகிரப்படுகின்றன. ஆனால் இந்தக் கருவியை பயன்படுத்தி நீங்கள் போலியான உள்ளடக்கங்கள் அல்லது படங்களை அடையாளம் கண்டு, அவற்றின் உண்மையை கண்டறியலாம்.

## இது எவ்வாறு வேலை செய்கிறது?

இந்தக் கருவி சம்பந்தப்பட்ட தகவல்கள் **WABetaInfo** இணையத்தளம் மூலமாக வெளியிடப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள படி, **WhatsApp** ஏற்கனவே இந்த அம்சத்தை **Android**ல் **BETA** நிலையில் சோதனை செய்து வருகிறது. **WhatsApp** பயனர்களுக்கு உதவியாக இருப்பதற்காக இந்த புதிய வசதியை எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதற்கான படிகளையும் இந்நிறுவனம் பகிர்ந்துள்ளது.

இதற்கு **Chat Screen**ன் மேல் வலது மூலையில் உள்ள மூன்று புள்ளி கொண்ட **Menu**ல் ஒரு புதிய **Option** சேர்க்கப்படும். ஏதாவது ஒரு படத்தை கிளிக் செய்து **Search** என்பதை தெரிவு செய்ய வேண்டும். இப்படி செய்யும்போது **Google** அந்த படம் பற்றி தனது தரவுத்தளத்தில் தேட ஆரம்பிக்கும்.




அதுமட்டுமல்லாமல், இந்த கருவியை பயன்படுத்தி படங்களுக்கான அதிக தகவலை தேடும் போது இந்த குறிப்பிட்ட படம் அல்லது செய்தி **Google** சேவையகங்களில் பதிவேற்றப்படும் என்பதை பயனர்களுக்கு **WhatsApp** தெரிவிக்கிறது. மேலும் இந்த தகவல்கள் பிறருக்கு பகிரப்படாது அல்லது **WhatsApp**ல் சேமிக்கப்படாது. **Search** வசதியை தெரிவு செய்வதன் மூலமாக குறிப்பிட்ட அந்த படம் சம்பந்தப்பட்ட உங்களுடைய சந்தேகங்களை கேட்கலாம். இதன் மூலமாக நீங்கள் மூன்றாம் தரப்பு பயன்பாடுகளை / செயலிகளை பயன்படுத்தி ஆவணங்களை **Scan** செய்ய வேண்டிய தேவையை இந்த புதிய அம்சம் நீக்கியுள்ளது. இது கிட்டத்தட்ட **Adobe Scan, Cam Scanner** மற்றும் உங்களுடைய போனின் **Camera** மூலமாக செயல்படும் **Default Scanner**ரை போலவே வேலை செய்கிறது.




இந்த அம்சம் படிப்படியாக வெளியிடப்பட்டு வருகிறது. ஒரு வேலை இந்த அம்சத்தை இன்னும் நீங்கள் பெறவில்லை என்றால் வரக்கூடிய வாரங்களில் புதிய இற்றைப்படுத்தல் மூலமாக அதனை எதிர்பார்க்கலாம். இந்த அம்சம் குறிப்பாக **Multi-Tasking** செய்பவர்கள் அல்லது அடிக்கடி **File**களை பகிர்பவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

### 2025 ஆம் ஆண்டின் முதலாம்...

செய்யப்பட்டது. மேலும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அனைவரும் அரச சேவை சத்தியப் பிரமாணத்தையும் மேற்கொண்டனர். இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் திரு.பே.பிரணவரூபன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.தி. கிருபைராஜா, கணக்காளர் திரு.க.றிஸ்வி யாஹ்சர், நிருவாக உத்தியோகத்தர் திரு.ஓ.கே. கீர்த்தி குசுமிந்த, சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் திரு.செ.சிவம், மேலதிக மாவட்ட பதிவாளர் திரு.பு.நித்தியானந்தன் ஆகிய உத்தியோகத்தர்களும் ஏனைய வெளிக்கள மற்றும் அலுவலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.





### வேலை வாய்ப்பற்ற இளைஞர்...

வேலைவாய்ப்பற்ற இளைஞர் யுவதிகளுக்கான தொழிற் சந்தையானது நாவிதன்வெளி கலாசார மண்டபத்தில் 2025 ஜனவரி 07ஆந் திகதியன்று நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. நாவிதன்வெளி பிரதேச செயலக மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். எப்.எம். பாஸில் அவர்களின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந் நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. தி. கிருபைராஜா, மனித வலு வேலைவாய்ப்பு திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் நாவிதன்வெளி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.













### *Clean Sri Lanka* வேலைத்திட்டம்...

உத்தியோகத்தர்களுக்கு தெளிவூட்டல் கருத்தரங்கானது நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் 2025 ஜனவரி 17ஆந் திகதியன்று பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயக பிரிவிற்குட்பட்ட அரச துறை நிறுவனங்களான கமநல சேவை நிலையம், பிரதேச சபை, சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் போன்றவற்றின் உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

### தையல் மற்றும் மனையியல்...

பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. அ. சர்மிலராஜ், கிராம அபிவிருத்தி திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. என். மேரிசுகாசினி ஆகியோரும் தையல் பாடநெறிக்கான போதனாசிரியர் திருமதி. எஸ். கமலினி அவர்களும் கலந்து கொண்டு மாணவர்களை வரவேற்றதுடன் அறிவுரைகளையும் வழங்கினர். மேலும் பிரதேச செயலாளரினால் பயிற்சி நிலைய வளாகத்தில் மரக்கன்றும் நடப்பட்டது.



### அஸ்வெசும பயனாளிகளை...

அவர்களின் தலைமையில் சொறிக் கல்முனை- 01 கிராம அலுவலர் பிரிவில் 2025 ஜனவரி 21ஆந் திகதியன்று அம்பாறை மாவட்ட செயலாளர் திரு. சிந்தக்க அபேவிக்ரம அவர்களினால் ஆரம்பித்து வைக்கப் பட்டது. இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர், அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர், நாவிதன்வெளி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திரு. பே. பிரணவரூபன், சொறிக்கல்முனை-01 கிராம அலுவலர் பிரிவிற்கான கிராம அலுவலர் மற்றும் நாவிதன்வெளி பிரதேச செயலக நலன்புரி நன்மைகள் பிரிவின் உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



## குறுக்கெழுத்துப் போட்டி இல.12 இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 மூ | வே | ந் | 2 த | ர் | ■ | ■ | 3 ம |
| ப் | ■ | ■ | ம் | ■ | 4 அ | ந் | தி |
| பு | ■ | ■ | ப | ■ | ரு | ■ | ல் |
| ■ | 5 ப | த் | தி | ய | ம் | ■ | ■ |
| 6 வி | ல் | ■ | ■ | ■ | 7 பு | 8 க | 9 ழ் |
| 10 ஆ | ல | ய | ம | 11 ணி | ■ | 12 ளி | பா |
| ■ | க் | ■ | ■ | ல் | ■ | ப் | ■ |
| 13 ம | கு | டி | ■ | 14 அ | டு | பு | ப் |

### வெற்றியாளர்

**1ஆம் இடம்**

டி. கர்ஷா - பாண்டிருப்பு

**2ஆம் இடம்**

வி. கேனுசா - காரைதீவு-01

**3ஆம் இடம்**

M.I. ஷிஹானுல் அஸ்கா
சாளம்பைக்கேணி-01

### பாராட்டு பெறுவோர்

இ. ரூபிகா
மண்டூர்

## குறுக்கெழுத்துப் போட்டி இல – 13

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | 5 | 6 | |
| 7 | | | ■ | 8 | | | ■ |
| 9 | | | 10 | | ■ | 11 | 12 |
| | ■ | ■ | 13 | | | | |
| 14 | 15 | 16 | ■ | | ■ | ■ | |
| ■ | 17 | | | ■ | 18 | 19 | |
| 20 | | | ■ | 21 | | | |
| 22 | | | ■ | | ■ | | ■ |

### இடமிருந்து வலம்

01. சிறப்பாக சொல்லும் பெயர், இதில் ஒரு சினிமா படமும் உண்டு.
07. சமம் என்றும் சொல்லலாம் (குழம்பி).
08. சாகரம் (குழம்பி).
09. சுவடு என்றும் சொல்லலாம் (குழம்பி).
11. அடக்கத்திற்கு இதனையும் உவமிப்பர் (திரும்பி).
13. ஆலயங்களுக்கு உரித்தான மரத்தை இப்படி கூறுவர் (குழம்பியதும் இல்லாது இறுதி 2 எழுத்தையும் காணவில்லை).
14. உள்ளம் (குழம்பி).
17. வதனம் என்றும் சொல்லலாம் (குழம்பி).
18. காதல் போனால் இது என்பர்.
20. மனமுவந்து செய்யும் செயல்.
21. இதனைக் காட்டி சோறு ஊட்டிய காலம் ஒன்றும் இருந்தது.
22. பிடிவாதத்தை இப்படியும் சொல்வர் (குழம்பி).

### மேலிருந்து கீழ்

01. காலங்களில் இதுவும் ஒன்று.
02. இது சகலருக்கும் முக்கியம் என்பதால்தான் குழம்பிவிட்டதோ!
03. ஒழுக்க விதி என்றும் சொல்லலாம் (குழம்பி).
04. வருடுதல் என்றும் சொல்லலாம்.
05. இவை 64 என்பர் (தலைகீழ்).
06. ஆற்றல் (குழம்பி).
10. முகத்தில் ஏற்படுவதை இப்படியும் கூறுவர்.
12. கொலைஞன் என்று பெயரும் உண்டு.
15. கிடைப்பதற்கு அரிதானது.
16. கேலியாக பேசுதலை இப்படியும் சொல்லலாம் (குழம்பி).
18. தென்கிழக்காசிய நாடொன்றின் தாய்மொழி.
19. இதைச் செய்தவர்கள் அதனை ஒத்துக் கொள்வதில்லை (குழம்பி).
21. சிங்கத்தின் மறுபெயர்களில் ஒன்று.

இதில் காணப்படும் குறுக்கெழுத்துப் போட்டிக்கான உருவமைப்பின் கட்டங்களை வெற்றுத்தாளில் தயாரித்து சரியான விடைகளைப் பூர்த்தி செய்து அதனை புகைப்படம் எடுத்து 2024.02.15 ஆம் திகதி பி.ப.4.15 மணிக்கு முன் 0755424333 எனும் வட்சப் இலக்கத்துக்கு அனுப்பவும். அத்துடன் தங்களது பெயர் முகவரி தொலைபேசி இலக்கம் (மீள்நிரப்ப வேண்டிய தொலைபேசி இலக்கம்) என்பவற்றையும் அனுப்பவும்.

RELOADING

முதலாம் பரிசு : 200/=
இரண்டாம் பரிசு : 150/=
மூன்றாம் பரிசு : 100/=


You're Invited to Our
GRAND OPENING
SINGAPORE JEWELLERY & PAWNING CENTRE
January
Friday 31 2025
9:30am - Onwards | No.68 Main Rd, Annamalai-01
Kalmunai
We would like to invite you and your family to join us for the auspicious opening ceremony of our new showroom.
We guarantee the best prices possible. Use the contact information below for additional details.
K.NIROJAN : 0776703160


சிங்கப்பூர் ஜூவலரி
SINGAPORE JEWELLERY
அடகு சேவை
68
நகை அடவு பிடிக்கும் இடம்


MAHOOR
GRINDING MILL
14, MANDOOR ROAD,
CHAVALAKADAI
0777120293
0743761611
நெல் குற்றுதல்
தேங்காய் அரைத்தல்
மிளகாய் தூள் இடித்தல்
அரிசி அரைத்தல் மற்றும்
தவிடு, குறுநெல், புண்ணாக்கு போன்றவற்றையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.


S.P 3D PRINTING
STUDIO
AVAILABLE SERVICES
3D Keychain Prinitng
Flipname
Lithophane
3D Printing
3D LED Photo Frame
DEEPAK
HARIKA
CONTACT:
11/113, CENTRAL CAMP - 03
0757637966 / 0769655832

# SMART INTERNET

D. ஜாசுகி - பிரதேச செயலகம், நாவிதன்வெளி.

இணையத்தளம் பயனுடையதும் விந்தையானதுமான ஆச்சரியமிக்க ஒரு இடமாகும். நீங்கள் இணையத் தளம் வாயிலாக பேசும்போது [Chat] அல்லது பரிமாறிக்கொள்ளும்போது [Share] உங்கள் மின்னஞ்சல் முகவரி [Email] தொலைபேசி இலக்கம், கடவுச்சொல் போன்ற தனிப்பட்ட தகவல்களை பரிமாறிக் கொள்ள வேண்டாம்.

## Safe - பாதுகாப்பு

அறிமுகம் இல்லாதவர்களுடன் இணையத்தளத்தில் தனிப்பட்ட தகவல்களை பரிமாறிக்கொள்ள வேண்டாம். பரிமாறிக் கொள்வதற்கு முன்னர் [Share] சிந்தித்துப் பாருங்கள். புகைப்படங்களை பயன்படுத்தி உங்களை அல்லது வேறு ஒருவரை அசௌகரியத்துக்கு உள்ளாக்குதல். தண்டனைக்குரிய குற்றமாகும்.

## Meeting - சந்தித்தல்

இணையத்தளத்தின் வாயிலாக அறிமுகமாகியவர்களை உங்கள் உண்மையான வாழ்க்கையில் சந்தித்தல் ஆபத்தானதாகும். நீண்ட காலமாக உங்கள் நண்பர்களைப் போல அவர்கள் பேசினாலும் இன்னமும் அவர்கள் அறிமுகமாகாத வர்கள் என ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.

## Accepting - ஏற்றல்

மின்னஞ்சல் அல்லது வேறு இணையத்தள முறைகளின் வாயிலாக உங்களுக்கு அறிமுகம் இல்லாத அல்லது நம்பிக்கை இல்லாத ஆட்களிடம் இருந்து கிடைக்கின்ற கோப்புக்கள் [Files], படங்கள் அல்லது வேறு செய்திகளை [Texts] திறப்பதன் ஊடாக உங்களுக்கு பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடலாம். அவ்வாறான செய்திகளில் கணணி வைரஸ் அல்லது அநாகரிகமான செய்திகள் உள்ளடங்கி இருக்கக் கூடும்.

## Reliable - நம்பகமான

எவரேனும் ஒருவர் இணையத் தளத்தில் தோன்றுகின்ற விதமும் வழங்குகின்ற தகவல்களும் பொய் யானவையாக இருக்கலாம். அவ்வாறு வழங்குகின்ற தகவல்களை வேறு இணையத் தளங்கள், நூல்கள் அல்லது அதைப்பற்றி தெரிந்த ஒருவருடன் பரீட்சித்துப்பாருங்கள். அல்லது நீங்கள் இணையத்தளத்தின் வாயிலாகப் பேசுவதை விட உங்களது உண்மையான உலகத்தில் நண்பர்கள், குடும்ப அங்கத்தவர்கள் ஆகியோருடன் பேசுவது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சிறந்ததாகும்.

## Tell - சொல்லுங்கள்

இணையத் தளத்தில் உங்களுக்கு ஏதேனும் தொந்தரவு ஏற்பட்டால் அல்லது தொந்தரவு ஏற்படப் போவதை உணர்ந்தால், வன்முறைக்கு உள்ளாகியிருந்தால், உங்களுக்கு தெரிந்த ஒருவராயின் உங்களுடைய பெற்றோருக்கு அல்லது பராமரிப்பு வழங்குநருக்கு அல்லது நம்பிக்கையான ஒருவருக்கு சொல்லுங்கள்.

விருப்பம் இல்லாத விடயத்திற்கு வேண்டாம் என்று சொல்வதற்கு உங்களுக்கு உரிமை உள்ளது. உங்களது தனித்துவத்தை பாது காத்துக் கொள்ளுங்கள். உங்கள் கணக்குகளில் கடவுச்சொல்லை வலுவுடையதாக தயாரித்துக் கொள்ளுங்கள். சமூக ஊடகங்களை பயன்படுத்தும்போது உங்களது அந்தரங்க அமைப்பினை Privacy Setting பரீட்சித்துப்



பார்த்து, உங்களது உண்மையான வாழ்க்கையில் உங்களுக்கு அறிமுகமான நண்பர்களை மாத்திரம் உங்கள் பிரசுரிப்புக்களை பார்ப்பதில் கவனம் செலுத்துங்கள். உங்கள் நண்பர்களை கௌரவமாக நடத்துங்கள்.

இணையத்தளத்தை தவறாக பயன் படுத்தினால் தவறான பெறுபேறுகள் கிடைக்கலாம். ஆகவே அதனை பொறுப்புடன் பயன்படுத்துங்கள். உங்கள் இணையத்தள நண்பர்களை எல்லாச் சந்தர்ப்பத்திலும் நம்ப வேண்டாம். அவ்வாறான ஆட்களை தவிர்ப்பதற்கு அல்லது கவனம் செலுத்தாமல் இருப்பதற்கு முயற்சி செய்யுங்கள். அவ்வாறான தொடர்புகள் ஏற்பட்டால் அதனைத் துண்டித்து விடுங்கள்.




இணையத் தளத்தினை கையாளும் போது ஏற்படும் பிரச்சினை அல்லது துன்புறுத்தல்கள் இருப்பின் 1929 இலங்கை சிறுவர் தொலைபேசி இலக்கத்துக்கு அல்லது இலங்கை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்றப்பிரிவின் 0112691692 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

# The Importance of Learning Chinese for Sri Lanka's Next Generation

*By: Mr. B. Sajindren*

In an increasingly globalized world, learning foreign languages is a powerful tool that can open doors to new opportunities. For Sri Lanka's next generation, learning Chinese, specifically Mandarin, has become especially important due to the growing significance of China in global economics, politics and culture. Let's explore why it is crucial for the youth in Sri Lanka to learn Chinese and the various benefits they can gain by doing so.

## Economic and Trade Opportunities

One of the primary reasons why Sri Lankans should learn Chinese is the economic and trade opportunities that come with China's rise as a global economic powerhouse. China is one of Sri Lanka's largest trade partners and the Belt and Road Initiative (BRI) has further strengthened the economic ties between the two countries. By 2025, China is expected to be the world's largest economy and many Sri Lankan businesses, industries and entrepreneurs are already engaging with China for trade, investment and tourism.

Learning Chinese opens the door to better communication with Chinese businesses, allowing Sri Lankans to tap into this vast market. Additionally, understanding the language helps Sri Lankans build deeper connections with Chinese-speaking clients and partners, facilitating smoother business transactions. Many multinational companies also require employees who can speak Chinese, creating career opportunities for those with proficiency in the language.

## Cultural Exchange and Diplomatic Relations

In addition to the economic advantages, learning Chinese fosters a better understanding of Chinese culture, which is one of the oldest and richest in the world. The ability to converse in Chinese allows Sri Lankans to engage more meaningfully with Chinese people, whether through tourism, study or cultural exchanges. By learning the language, Sri Lankans can better appreciate Chinese history, traditions, art, and philosophy, leading to a deeper cultural exchange between the two countries. Moreover, Sri Lanka's relationship with China is vital on the diplomatic front, especially given the increasing global influence of China. A generation of Sri Lankans who are proficient in Chinese will be better equipped to navigate and strengthen Sri Lanka's diplomatic ties with China. As the two countries continue to collaborate on infrastructure development and other projects, understanding Chinese becomes a crucial asset for fostering diplomatic relations.

## Career and Educational Advancement

For Sri Lankan students, learning Chinese can significantly enhance their career prospects. As China continues to expand its global footprint, demand for individuals who can speak Chinese is growing. Many companies, especially those with ties to China, seek employees who can bridge the gap between cultures and languages. Furthermore, Chinese language proficiency is often a highly regarded skill in international relations, trade, tourism, and education sectors.

On the educational front, China offers numerous scholarships for foreign students, including Sri Lankans, to study in its universities. These scholarships are available for various fields, ranging from engineering to medicine to arts, and the ability to




communicate in Chinese can be a significant advantage when applying for these programs. In addition, students proficient in Chinese can also access a wealth of academic resources, as many research papers, journals, and books are published in Chinese, enabling Sri Lankan students to engage with global knowledge.

## Enhancing Cognitive Skills and Global Competency.

Beyond the professional and cultural benefits, learning Chinese provides cognitive advantages. Studies have shown that learning a second language improves cognitive function, such as memory, problem-solving skills and multitasking. Chinese, with its unique characters and tonal nature, offers a mental workout that enhances brain development and improves focus and concentration. For Sri Lankan students, learning Chinese will not only give them a competitive edge but will also equip them with the cognitive tools necessary for thriving in the globalized world.

In conclusion, learning Chinese is essential for Sri Lanka's next generation, as it offers economic, cultural, diplomatic, and cognitive benefits. As Sri Lanka's ties with China grow, proficiency in Mandarin will become an invaluable skill, opening doors to a wide range of opportunities in trade, education, career advancement and international relations. Embracing Chinese will not only position Sri Lankan youth for success in the global economy but will also foster greater cultural understanding and cooperation between the two nations. Therefore, it is crucial that the youth of Sri Lanka take the initiative to learn Chinese and equip themselves for the future.

கடந்த மாத இதழின் தொடர்ச்சி...

## 4.2 உங்கள் வசம் உள்ள காணியில் இருக்கும் மரங்களை பயன்படுத்த முடியுமா?

NMM A. Sujan - Colonization Officer

உங்கள் வசம் அனுமதிப் பத்திரம் அல்லது கொடுப்பனவு பத்திரத்துடன் காணியில் உங்களால் பயிர் செய்யப்பட்ட மரம் மற்றும் இயற்கைத் தாவரங்களை பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளன.

ஆனால், இந்த நடவடிக்கையை பெரும்பாலும் எச்சரிக்கையுடன் முன்னெடுக்க வேண்டும். அனுமதிப் பத்திரம் அல்லது உறுதிப்பத்திரம் இல்லாத காணிகளில் காட்டு மரங்களை ஒருபோதும் அகற்ற முடியாது. மரங்களை அகற்றுவதாயின், முதலாவதாக கிராம சேவகர் ஊடாக பிரதேச செயலாளரிற்கு கோரிக்கை முன் வைக்க வேண்டும்.

அதன் பின்னர் பிரதேச செயலாளர் அல்லது உதவி பிரதேச செயலாளர் குறித்த பகுதிக்கு வருகை தந்து ஆராய்ந்து நடவடிக்கை எடுத்து, மரம் வெட்டுவது தொடர்பாக அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பார். இந்த அனுமதியின்றி மரத்தை வெட்டி அல்லது அருகில் வைத்துக் கொண்டால், வனப்பாதுகாப்பு அதிகாரி/ கிராம அதிகாரி அல்லது குடிசன அதிகாரி அல்லது பொலிஸார் வந்து, உங்களிடம் உள்ள மரங்களை கைப்பற்றுவதுடன், உங்களை கைது செய்ய முடியும்.

நீங்கள் இவ்வாறு உங்கள் காணியில் வெட்டிய மரங்களை, வாகனத்தில் கொண்டு செல்வதற்கான தனியான அனுமதிப்பத்திரம் பெற வேண்டும். இவ்வாறு மரத்தை காணியில் இருந்து கொண்டு செல்வதற்கான அனுமதி அளிப்பதற்கு வருகை தரும் அதிகாரியின் பரிந்துரை கடிதத்தை, பிரதேச செயலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். தடை செய்யப்பட்ட வகை மரங்களை காணியிலிருந்து வெளியில் கொண்டு செல்வதற்கு (கருங்காலி, தேக்கு, பாலை, மதுர போன்றன) வன அதிகாரிகள், பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட வன அதிகாரிகளின் (DFO) அனுமதியைப் பெறல் வேண்டும்.

# 4.3 அரசாங்க காணி மதிப்பிடல் மற்றும் காணி வரி அறவிடல்

தகவல் மூலம் - டிரான்ஸ்பரேன்ஸி இன்டர்நெசனல் - ஸ்ரீலங்ககா

ஒரு நபருக்கு அரசாங்கத்தின் காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தின் காணிப் பகுதிகளை குத்தகை அடிப்படையில் வழங்குவதில் அதற்கான வருடாந்த வரி அறவிடல் இடம்பெறும்.

காணி வழங்கப்படும் பிரதான சந்தர்ப்பத்தில் பிரதேச செயலாளர் ஊடாக அந்த காணி தொடர்பில் உத்தேச மதிப்பீடு முன்னெடுக்கப்பட்டு, அதன் பெறுமதியின் 4% வருடாந்த காணி வரியாக அறவிடப்படும்.

எவ்வாறாயினும், காணியை குத்தகைக்கு வழங்குவது கௌரவ காணி அமைச்சரின் அனுமதி வழங்கப்பட்டதன் பின்னர், இந்த காணியை முறையாக மதிப்பீடு செய்தல் வேண்டும். இதன் பொருட்டு பிரதேச செயலாளரினால் மதிப்பீடு நடத்தப்பட வேண்டிய வருடம் மற்றும் காணியின் உறுதியான பெறுமதி மற்றும் வரைபட பிரதி என்பன மாகாண மதிப்பீட்டாளருக்கு அனுப்பி வைக்கப்படும். அதன் பின்னர் பிரதான மதிப்பீட்டு அதிகாரிகள் குறித்த காணிக்கு வருகை தந்து மதிப்பீட்டின் போது ஆராய்ந்து பார்க்க வேண்டிய விடயங்களை கவனத்தில் கொண்டு காணியின் பெறுமதியை பிரதேச செயலாளருக்கு குறிப்பிட்டு அனுப்பி வைப்பர். அதன் பின்னர் கௌரவ அமைச்சரினால் அனுமதியளிக்கப்பட்டவாறு வரி தொகை மற்றும் அபராதத் தொகை அல்லது தவணை முதல் இருப்பின், அதனை குத்தகைதாரருக்கு பிரதேச செயலாளர் அறிவிப்பார். வரி அறவிடுவதில் காணி பயன்படுத்தும் நோக்கத்திற்கு ஏற்ப மதிப்பீட்டு பெறுமதியின் அறவிடும் சதவீதம் வேறுபடும். வெளிப்படையாக தங்குமிட நடவடிக்கைக்காக மதிப்பீடு பெறுமதியின் 4% ஆக அறவிட்டாலும், புண்ணிய நடவடிக்கைகளுக்கு மதிப்பீட்டு பெறுமதியின் 0.5% மாத்திரமே அறவிடப்படும். இதுதவிர வேறு பல்வேறு நடவடிக்கைகளுக்கு மதிப்பீட்டுத் திணைக்களம் ஊடாக காணிகளுக்கு அல்லது கட்டடங்களுக்கு மதிப்பீடு செய்யப்படும் சந்தர்ப்பங்கள் உள்ளன. மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு பெறுவது பிரதேச செயலாளரினால் முன்னெடுக்கப்படும் உத்தியோகப்பூர்வ பணியாக இருப்பதுடன், தனியாக அரசாங்க காணிக்கான மதிப்பீட்டினை பெறுவதற்கு வாய்ப்பு இல்லை.

அவ்வாறே, அந்த மதிப்பீடு தொடர்பில் திருப்தி அடையாதவர், அது குறித்த மேன்முறையீட்டினை பிரதான மதிப்பீட்டுக்கான காரணங்களுடன் சமர்ப்பிக்க முடியும். இந்த மேன்முறையீட்டினை பிரதேச செயலாளர் ஊடாகவே முன்னெடுக்க முடியும்.

அதனைத் தவிர பிரதேச செயலாளர் ஊடாகவும் காணி பெறுமதி மதிப்பீடு செய்வதற்கான சந்தர்ப்பம் உள்ளது. பெறுமதியை உறுதிப்படுத்தும் போதும், சான்றிதழ் விநியோகிக்கும் போதும் அந்த செயற்பாடு முன்னெடுக்கப்படும். நபர்களின் வேறுபட்ட தேவைகளுக்காக பிரதேச செயலாளரினால் சொத்து மற்றும் வருமான சான்றிதழ் விநியோகிக்கப்படும். விசேடமாக, வருமானத்தினை உறுதிப்படுத்துவதற்கும், நீதிமன்றத்தில் பிணை வைப்பதற்கும் சொத்து சான்றிதழ் விநியோகிக்கப்படும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் காணி மதிப்பீடு செய்யும் போது, பிரதேச செயலாளரினால் காணியின் அளவு, அதன் எல்லை காணி ஊடாக முன்னெடுக்கக் கூடியதுடன், அபிவிருத்தியில், காணிக்கான பிரவேசவழி, நீர், தொலைபேசி, மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள் குறித்து அவதானமாக இருந்தே காணி மதிப்பீடு முன்னெடுக்கப்படும்.

தொடரும்...

# கிராம மக்களின் வாழ்வும் வளமும்

செல்வசிகாமணி (ஓய்வுநிலை அதிபர்)-சென்றல்கேம்ப்

கடந்த மாத இதழின் தொடர்ச்சி...



எமது அன்பிற்குரிய வாசகர் உறவுகளுக்கு கிராம மக்களின் பெருமை கூறும் மற்றுமொரு வைத்தியத்துறை தொடர்பான தகவலைப் பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கின்றேன். அது தான் எலும்பு முறிவு, மூட்டு விலகல், மூட்டுவலி, நாட்பட்டநோவு, கண்டல்காயம், வாதக்கடுப்பு போன்றவற்றிற்கான வைத்திய முறையாகும். இதனைப் பொதுவாக மக்கள் முறிவு வைத்தியம் என்றே அழைப்பதுண்டு. முறிவு வைத்தியம் என்றால் அன்று முதல் இன்று வரை எமது பிரதேசத்தில் குடியிருப்பு முனைதான் பெயர் பெற்ற இடமாகும். தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் அனைவருமே இதனைக் கூறுவர். குடியிருப்புமுனை எங்குள்ளது?

நாவிதன்வெளி ஊரை அடுத்ததாக அன்னமலை, அதனை அடுத்ததாக காணப்படும் கிராமமே குடியிருப்பு முனைக் கிராமமாகும். இது முனை போன்று வாவிப்பக்கமாக சென்று உள்ளவாறு அமைந்துள்ளது. இங்கு வாழும் மக்கள் துறைநீலாவணையில் இருந்து குடியேறியவர்களும் மிகக் குறைந்தளவிலான மக்கள் கோட்டைக் கல்லாறு ஊரைத் தாயகமாகக் கொண்டவர்களுமாவர். தொழில் என்ற வகையில் பிரதானமானது மீன்பிடியே. அது தவிர விவசாயம், மாடு வளர்ப்பு போன்றவையும் காணப்படுகின்றன.

இப்பழம்பெரும் கிராமம் பரப்பிலே சிறிதாக இருப்பினும் புகழிலே பெரிதாகக் காணப்படுவதற்கு இந்த முறிவு வைத்தியமும் ஒரு காரணம் என்றால் அது மிகையல்ல. இங்கு வாழும் மக்களில் முன்பு குறிப்பிட்டது போன்று கோட்டைக் கல்லாறு ஊரைச் சேர்ந்த மக்களும் வாழ்கின்றனர். இவர்களில் ஒருவரே குடியிருப்பு சாமி என்பவராவார். இவர் மூலமாகவே இங்கு முறிவு வைத்தியமுறை ஆரம்பிக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. அப்போது வயதான தந்தையாரோடு சிறுவனாக இருந்து தனது மகனான செல்லப்பா அவர்கள் இந்த வைத்திய முறையை செய்து வந்ததோடு பின்னர் இவர் இதை முறையாகப் பயின்று அதன்மூலம் மூவின மக்களுக்கும் சிறந்த சேவையை ஆற்றினார். என்பதும் இவரது காலத்திலேயே இவ் வைத்தியத்துறை புகழ் பெற்றிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

1941ஆம் ஆண்டு பிறந்தவரான திரு. சாமித்தம்பி செல்லப்பா அவர்களின் பின்னர் அவர்கள் மகன்மார்களான திரு. செ. புஷ்பராசா, திரு. செ. சுரேன் ஆகியோர்கள் தன் தந்தைவழிப் பாரம்பரிய தொழிலான முறிவு வைத்தியத் துறையை தந்தையார் வழியிலும் கற்று அதற்கு மேலதிகமாக ஆயுள்வேதக் கல்லூரியிலும் கற்று தற்போதும் அந்தச் சேவையைச் செய்து வருகின்றனர் என்பது பிரதேசத்திற்குப் பெருமையே.

அது மட்டுமன்றி திரு. செல்லப்பா ஆயுள்வேத வைத்தியர் அவர்களின் மகன்மார்களில் ஒருவரான திரு. செ. சுரேன் அவர்கள் ஆங்கில வைத்தியத் துறையில் தாதியாக மத்தியமுகாம் அரச வைத்தியசாலையில் கடமை ஆற்றிக் கொண்டிருக்கின்றார். இது ஆயுள்வேத வைத்தியர் செல்லப்பா அவர்களுக்கு மேலும் பெருமை சேர்க்கும் விடயமாகும். இதனோடு தான் அவர்கள் தந்தைவழி முறிவு வைத்திய முறையையும் செய்து வருகிறார்.

முறிவு வைத்தியம் என்றால் என்ன? எலும்புகள் உடைதல், முறிதல், மூட்டுகள் விலகுதல் போன்றவை ஏற்படும் போது அவற்றை பழைய நிலைக்குக் கொண்டு வருதலே முறிவு வைத்தியம் ஆகும். உடைந்ததைச் சரியாக ஆராய்ந்து பார்த்து மீளவும் சரியான நிலையில் வைத்து நோவுகளை எண்ணெய் தேய்த்து பின்னர் “பத்து” போடுவார்கள். சாதாரண முறிவானால் ஒரு பத்து போதுமானது. பெரிய முறிவானால் இரண்டு, மூன்று முறை போடுவது முண்டு. இது இன்றும் ஆங்கில வைத்திய முறைக்கு நிகரான ஒன்றாகவே விளங்குகின்றது.

# தாய்ப் பாலூட்டல்

சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் - நாவிதன்வெளி.

கடந்த மாத இதழின் தொடர்ச்சி...

சூப்பியில் பால் குடித்து பழகிய குழந்தை முலைக்காம்பை வாயினுள் உறுஞ்சுவதற்கு மறுக்கும். சூப்பியினால் பால் இலகுவாக வாயினுள் பெருகி வரும். சூப்பியில் பழக்கப்பட்ட குழந்தை தாய்ப்பாலை மறுக்கும். நோய் நிலைமை ஏற்பட்ட குழந்தைக்கு தாய்ப்பாலின் முக்கியத்துவம்.

- கூடுதலான நோய்களை குணமாக்கும் சக்தி தாய்ப்பாலில் உள்ளது. தாய்ப்பால் குடிக்கும் குழந்தையின் நோய் விரைவாகக் குணமடையும்.

- நோயுற்ற குழந்தை வேறு உணவை விரும்பாமல் தாய்ப்பாலை பெரிதும் விரும்பும். அதனால் அதற்கு தேவையான போசாக்குக் கிடைக்கும்.

- அது மட்டுமன்றி தாய்ப்பாலை உறிஞ்சிக் குடிக்கும் போது குழந்தைக்கு மனத்தைரியம் கிடைக்கும்.

- நோயுற்ற குழந்தைக்கு எவ் வேளையிலும் பால் ஊட்டிக்கொண்டே இருக்க வேண்டும்.

- தாய்க்கு ஏற்படும் அனேகமான நோய்களுக்கு பாலூட்டுவதை நிறுத்த வேண்டியதில்லை. உங்களுக்கு ஏற்பட்ட நோய்களிலிருந்து குழந்தையை காப்பாற்றிக்கொள்வதற்கு தேவையான சக்தி தாய்ப்பாலில் உண்டு.

- தாய் எப்போதும் வைத்திய சிகிச்சை பெறும்போது நீங்கள் பாலூட்டும் தாய் என்பதை தெரியப்படுத்துங்கள். இதனால் பால் கொடுக்கும் காலத்தில் பாவிக்கக் கூடாத மருந்துகளை உங்களுக்கு கொடுப்பது தவிர்க்கப்படும்.

## தாய்ப்பாலூட்டலின் நன்மைகள்

### குழந்தைக்கு:-

- தாய்ப்பாலில் குழந்தை வளர்வதற்கு வேண்டிய சகல போசணைப் பதார்த்தங்களும் அடங்கியுள்ளன.

- குழந்தையின் சராசரி உடல் வளர்ச்சிக்கும் மற்றும் உகந்த மூளை வளர்ச்சிக்கும் தேவையான ஊட்டச்சத்தினையும் போசாக் கினையும் தாய்ப்பால் வழங்குகின்றது. இதன்மூலம் குழந்தையின் IQ மட்டம் கூடுகின்றது.

- நோய்த் தொற்றுதலுக்கு எதிரான பாதுகாப்பினை வளங்குகின்றது.

சுவாசத் தொகுதி நோய்கள் (0-23 மாதங்கள்) - 72 % குறைவு.

வயிற்றோட்ட நோய்கள் (0-23 மாதங்கள்) - 64 % குறைவு.

திடீர் குழந்தை இறப்பு - 38 % குறைவு.

காதுத்தொற்று - 50 % குறைவு.

- தாய்ப்பாலூட்டல் குழந்தைக்கு ஏற்படக்கூடிய தோல் நோய், சிறுநீர்ப் பிரச்சினைகள் போன்ற தொற்று நோய்களிலிருந்து பாதுகாக்கும்.

- குழந்தையின் தாடை வளர்ச்சி மற்றும் காதின் உட்புறப் பகுதிகளுக்கு தேவையான காற்றோட்டத்தினையும் அதிகரிக்கின்றது.

- தாய்ப்பாலூட்டுவதன் மூலம் இரத்தப் புற்று நோயிலிருந்து பாதுகாப்புக் கிடைக்கின்றது.

- தாய்ப்பால் குடிக்கும் குழந்தைக்கு இளைப்பு (அஸ்மா) ஏற்படுதல் குறைவாகக் காணப்படும். இது பெட்டிப்பாலினால் அதிகமாக ஏற்படும்.

- தாய்ப்பால் குடித்த குழந்தைக்கு வயதானாலும் உயர்குருதி அமுக்கம், இருதயநோய், நீரிழிவு, பக்கவாதம் போன்றன ஏற்படும் அபாயம் மிகவும் குறைவாகக் காணப்படும்.

- தாய்ப்பால் குடிக்கும் குழந்தைக்கு பற்சூத்தை ஏற்படுவது குறைவு. இதனால் குழந்தை அழகாகக் காணப்படும்.

- தாய்க்கும் குழந்தைக்குமான பாசம் அதிகரிக்கும்.

### தாய்க்கு:-

- தாய்ப்பாலூட்டுவதால் உடற்பருமன் அடைதல், நீரிழிவு நோய் மற்றும் இதய நோய்கள் போன்றன எதிர்காலத்தில் ஏற்படாமல் தடுக்கின்றன.

- பிரசவத்தின் பின் வெளியேறும் இரத்தம் தாய்ப்பால் கொடுப்பதால் குறைவடையும். இதன்மூலம் தாய்மார்களின் மரணங்கள் தடுக்கப்படும்.

- தாய்ப்பாலூட்டும் போது மார்பகப் புற்றுநோய் சூலகப் புற்றுநோய் ஏற்படும் அபாயம் குறைவு.

- குழந்தைக்கும் தாய்க்கும் ஏற்படும் நோய்க்கான செலவு குறைக்கப்படுவதனால் மேலதிக செலவு குறைவடைந்து வாழ்க்கைச் செலவு குறைவடையும்.

மேலும் குழந்தைகளுக்கான பால் மாவை கலந்து கொடுக்கும் போது மேற்குறிப்பிட்ட பயன்களை இழப்பது டன் மேலதிக பொருளாதாரச் சுமைக்கு ஆளாக வேண்டி ஏற்படும். எனவே எந்த தொழிற் சாலையிலுமே உற்பத்தி செய்ய முடியாத விலை மதிப்பற்ற மிகவும் பாதுகாப்பான தாய்ப்பாலை மட்டுமே முதல் ஆறு மாத காலங்களுக்கும் கொடுப்பதன் மூலம் IQ level கூடிய திறமையான பிள்ளைகள் நிறைந்த எதிர்கால சந்ததியினரை உருவாக்குவோம்.



# துண்டாக்கப்பட்ட மீன் - பீ ஹூன் சூப்

## 2 நபர்களுக்குப் பரிமாறக்கூடிய அளவு

**தயாரிக்கும் நேரம்:** 20 நிமிடங்கள்
**சமைக்கும் நேரம்:** 15 நிமிடங்கள்

*R.Rupiga - Development Officer, Navithanveli*

### தேவையான பொருள்கள்:

*300 கிராம் எலும்பு நீக்கப்படை தோமன் மீன் துண்டுகள் அல்லது உங்களுக்கு விருப்பமான இலகுவாக வேக வைத்த மீன் வகை.
* 80 கிராம் உலர வைக்கப்பட்ட பழுப்பு அரிசியால் செய்யப்பட்ட பீ ஹூன், தண்ணீரில் 20 நிமிடங்கள் ஊற வைக்க வேண்டும் .
* 2 தக்காளிகள்.
* 2 சுருள் வெங்காயம்.
* 10 கிராம் நறுக்கிய இஞ்சி.
* 2 தேக்கரண்டி எண்ணெய்.
* 1 தேக்கரண்டி நல் எண்ணெய்.
* 500 மில்லிலீற்றர் சுடுதண்ணீர்.
* மிளகாய். (தேவைப்பட்டால்)
* 8-10 லாட்டூஸ் இலைகள்.
(கடிக்கும் அளவிற்கு நறுக்கப்பட வேண்டும்)
* 2 தேக்கரண்டி கோழி அல்லது மீன் ஸ்டாக் சுவையூட்டி
* சுவைக்கு மிளகு.

### செய்யும் முறை :

* எண்ணெய் (non - stick pan) சூடாக்கவும்.
* துண்டாக்கப்பட்ட இஞ்சி வாசனை வரும்வரை வறுக்கவும்.
* இரண்டு கோப்பை தண்ணீர் ஊற்றி ஸ்டாக் சுவையூட்டியை சேர்த்து கொதிக்க விடவும்.
*Evaporated Milk, மிளகாய், மற்றும் சுவைக்காக மிளகைச் சேர்த்து சமைக்கவும்.



# பெரும் சவாலாக மாறியுள்ள பிள்ளை வளர்ப்பு

ஏ.எம். கஸ்பியா வீவி - பிரதேச செயலகம், அட்டாளைச்சேனை



பிள்ளைகள் மத்தியில் எப்போதுமே முன் மாதிரியாக இருக்க வேண்டியவர்கள் பெற்றோர்கள் தான். தாம் செய்கின்ற செயல்களை நடத்தைகளை பார்த்தே தான் பிள்ளைகள் கற்றுக் கொள்கின்றனர். இன்றைய கால சூழ்நிலையில் பிள்ளை வளர்ப்பு என்பது பெரும் சவால் மிக்க ஒன்றாக காணப்படுகின்றது. டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட அத்தனை சாதனங்களுக்கு மத்தியில் அவற்றுக்கு நிகராக போட்டி போட்டு அவற்றில் இருந்து பாதுகாத்து எமது பிள்ளைச் செல்வங்களை வளர்த்தெடுக்க வேண்டிய நிலைப்பாடு தோன்றி உள்ளது. பிள்ளைகள் அதீத அறிவுத் திறனை ஆற்றலை கொண்டு காணப்படுகின்றனர். அவற்றுக்கு ஈடு கொடுக்க முடியாமல் பாடசாலையில் ஆசிரியர்களும், வீடுகளில் பெற்றோர் ,பாதுகாவலரும் திண்டாடுகின்ற ஓர் நிலைமை இன்று காணப்படுகின்றது.

முன்னொரு காலத்தில் பாடசாலைக் கல்வியை மாத்திரமே பிள்ளைகள் நம்பி இருந்தனர். ஆனால் இன்று அவ்வாறானதொரு நிலை இல்லை உலகம் உள்ளங்கைக்குள் சுருங்கி விட்டதால் இருந்த இடத்தில் இருந்து கொண்டே தமக்குத் தேவையான அனைத்து விடயங்களையும் அடி முதல் நுனிவரை கற்றுக் கொள்கின்ற வசதி வாய்ப்புகள் மாணவர் மத்தியில் அதிகரித்து உள்ளது. அது மாத்திர மில்லாது அறிவு, திறன், மனப்பாங்கு, நடத்தைக்கோலம் என்பதையும் காலத்துக்கு ஏற்றால் போல் பிள்ளைகளிடையே மாற்றம் செலுத்தி வருகின்றது. பெற்றோர்கள் கைத்தொலைபேசி, தொலைக்காட்சி மற்றும் கணினி இணையத்தளங்கள் ஆகியவற்றில் தமது நேரத்தை செலவிட்டு கொண்டு பிள்ளைகளைப் படி என்றும் தனது வீட்டு வேலைகளை செய்யுமாறும் கட்டளை இடுகின்றனர். ஆனால் அவற்றிற்கு செவிசாய்க்க பிள்ளைகள் தவறுகின்றனர். காரணம் பிள்ளை எதிர்பார்ப்பது பெற்றோருடன் சேர்ந்து தாமும் நேரத்தை தொலைக்காட்சி முன் கழிப்பதற்கே விரும்புகின்றனர். இந்த நிலையில் பெற்றோர்கள் தாங்கள் இதை உணர்ந்து பிள்ளைகள் படிக்கின்ற நேரத்தில் தாமாக இவற்றைத் தவிர்த்து பிள்ளைகளைச் சேர்த்து வீட்டுப் பாடங்களை சொல்லிக் கொடுப்பதற்கும் அல்லது அவர்களுக்கு பக்கத்தில் அமர்ந்து அவர்களுக்கு துணையாக இருந்தால் மட்டுமே அவர்கள் தங்களது வேலைகளை தானாக செய்வதற்கு முன் வருவார்கள். குடும்பத்தில் பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகளுக் கான முரண்பாடுகள் அதிகரிப்பதற்கு வாய்ப்புகள் ஏற்படுகின்றது. இன்று பெரும்பாலான வீடுகளில் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களின் கவனயீனம் அல்லது அசமந்தப்போக்கு காரணமா கவே பல்வேறு துஷ்பிரயோக மற்றும் சிறுவர்களுக்கு அச்சுறுத்தலான செயல்பாடுகள் இடம்பெறுகின்றது.

பிள்ளைகள் தாமாக எதையும் செய்வதில்லை. சூழலில் கேட்கின்ற அல்லது காண்கின்ற விடயங்களை அவர்கள் பிரயோகித்து பார்க்கின்றனர். உதாரணமாக குடும்பங்களில் கணவன், மனைவி சண்டையிடுவதை பிள்ளைகள் ஒரு பாடமாக எடுத்துக் கொள்கின்றார்கள். சண்டையின் போது கெட்ட வார்த்தைகள் பேசுவது, முரண்படுவது அல்லது சண்டையிடுவது போன்ற செயற்பாடுகளில் அவர்கள் பிரயோகிக்கும் வார்த்தைகள் அல்லது அடிதடி சம்பவங்கள் என்பவற்றை கண்ணுற்று நாளுக்கு நாள் அதற்கு பழக்கப்பட்டு தங்கள் மனங்களில் இயல்பாகவே வன்முறை சம்பவங்களை உருவாகக்கூடிய தன்மை ஏற்படுகின்றது. இதனை அவர்கள் பாடசாலைகளில், வகுப்பறைகளில், பிரத்தியேக கல்வி நிலையங்களில் சிறுசிறு விடையங்களுக்காக ஏனைய மாணவர்களுடன் சண்டையிட்டு அவை உயிரைக் காவு கொள்ளும் அளவிற்கு பெரிதாக மாறும் நிலையும் இன்று ஏற்பட்டுள்ளது.

இது மாத்திரமன்றி வீடுகளில் இன்று பெண்கள் ஆடம்பர வாழ்க்கையை அதிகம் விரும்புகின்றனர். இதனால் நுண்கடன், அதிக வட்டிக்கு கடன் பெறுவது, குடும்ப தலைவர்களுக்கு தெரியாமல் மாதாந்த தவணை அடிப்படையில் ஆடம்பர பொருட்களை கொள்வனவு செய்வது போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

இதனால் கணவன் உழைத்து வரும் சிறுதொகைப் பணத்தைக் கூட பிள்ளைகளுக்கான உணவு மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்கு செலவு செய்யாமல் பிள்ளைகளைப் பட்டினி போட்டுவிட்டு வட்டிக் கடைகளில் வட்டிப் பணத்தை செலுத்துவதோடு வீட்டு வாசலில் நிற்கும் கடன் காரர்களுக்கும், அதிகாரிகளுக்கும் கடன்களை செலுத்தி வருகின்றனர். ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் இவை அளவு கடந்து செல்லும்போது சமாளிப்பதற்கு வேறு வழி தெரியாமல் தூக்கிட்டு தனது உயிரை மாய்த்துக் கொள்கின்றனர். இதன் பின்னர் தமது பிள்ளைகள் மற்றும் கணவன், மனைவி ஆகியோர் படும் இன்னல்களை அவர்கள் மறந்து நிம்மதியாக சென்று விடுகின்றனர்.



# அத்தை மடியில் விளையாடலும் அல்லி விழி மூடலும் அதன் முக்கியத்துவமும்

# குழந்தை நித்திரை

கி.யோகலிங்கம், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்

நித்திரை என்பது ஓர் சமஸ்கிருதச் சொல்லாகும். தமிழில் உறக்கம், துயில், துஞ்சுதல் போன்ற அழகான சொற்கள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. ஆழ் நிலையில் சுய உணர்வின்றி தூங்குவது மனிதர்களும், விலங்குகளும் ஓய்வு கொள்ளும் ஓர் நிலை நித்திரையாகும். பாலூட்டிகள், பறவைகள், ஊர்வன, ஈருடக உயிரினங்கள் மீன்கள் எனப் பல உயிரினங்களின் தொடர் இயக்கத்திற்கும், ஆரோக்கியத்திற்கும் உயிர் வாழ்வதற்கும் அவசியமாகும். இரத்தத்தில் ஒட்சிசன் அளவு குறைந்து சுத்திகரிப்பு தேவைப்படும்போது மூளை தூங்கி, முகுளம் வேலை செய்யும் நேரம் தூக்கம் வருகின்றது. சுருக்கமாக சொன்னால் மின்சாரத்தடை ஏற்படும்போது UPS வேலை செய்வது போலானதாகும்.

தூக்கத்தை ஒத்திப்போடும் ஒரே பாலூட்டி மனித இனம் மட்டும்தான். "மெத்தையில் படுத்தல் நித்திரைக்கு அழகு..." (கொன்றை வேந்தன் ஔவையார்) "நித்திரை தானொரு சத்துருவாச்சுத" (குற்றாலக் குறவஞ்சி) "நிசிவேளை நித்திரை யாத்திரை பிழைத்தும் (திருவாசகம் 4,29) இவ்வாறு நித்திரை பற்றிய விடயங்களை நாம் நமது தமிழ் இலக்கியங்களில் உரைத்துக் கொண்டே போகலாம். நல்ல நித்திரையும், ஒய்வும் ஒரு மனிதனுக்கு அவசியம். அதிலும் குழந்தைகளுக்கும், பாடசாலை செல்லும் மாணவர்களுக்கும் இது மிக முக்கியம். படிக்கும்போது மூளை புதிய தகவல்களை சேகரித்துக்கொள்ளும், பல்வேறு நரம்புகளை இயக்கும். மூளைக்கு போதிய ஓய்வு கிடைத்தால் புதிய தகவல்களை சரியான முறையில் சேகரித்து ஒருங்கிணைத்துக் கொள்ளும், நரம்புத் தூண்டலுக்கு சரியான முறையில் எதிர்வினை புரியும்.

பிரபல அமெரிக்க கல்வியலாளரும், இந்தியாவில் கல்வி இயக்குனராக மிக நீண்டகாலம் பணியாற்றியவரும், பிரபல குழந்தை வளர்ப்பு ஆய்வாளருமான ஸ்டீபன் ருடோஃப் தனது ஆய்வுகள் மற்றும் அனுபவங்கள் மூலம் கண்டு பிடித்து வெளியிட்ட குழந்தை வளர்ப்பு முறையில் குழந்தைகளின் நித்திரை பற்றி சற்று ஆராய்வோம். முதலாவதாக வயது அடிப்படையில் நித்திரை கொள்ளும் கால அளவினைப் பார்ப்போம்.

*12 மாதங்கள் - 14.5 மணி நேரம்.
*02 வருடங்கள் - 13 மணி நேரம்.
*05 வருடங்கள் - 11 மணி நேரம்.
*10 வருடங்கள் - 10 மணி நேரம்.
*16 வயது - 8.5 மணி நேரம்.
*16 வயதிற்கு மேல் - 7 தொடக்கம் 8 மணி நேரம்.

6 வயதிற்குட்பட்ட குழந்தைகள் பகலில் 1 மணி நேரத்திற்கு மேலாக நித்திரை கொள்வது நல்லது. ஆனால் ஆறு வயதிற்கு மேலான குழந்தைகள் பகலில் நித்திரை கொள்ளாமல் இருப்பது நல்லது. இரவு உணவு உண்ட பின்னரான இரண்டு மணி நேர இடைவெளிக்குப் பின்னர்தான் நித்திரை கொள்ளச் செல்வது நல்லது. ஒவ்வொரு நாளும் நேரம் தவறாமல் தூங்கி எழுவதை பழக்கமாக்கிக் கொள்வது சிறந்தது.

நித்திரை கொள்ளும் அறை, இடம் இருட்டாக இருத்தல் வேண்டும். விசேடமாக குழந்தைகள் நித்திரை கொள்ளும்போது தளர்வான உடைகள் அணிதல் வேண்டும். சீனி அல்லது கோதுமை மா போன்றவற்றை கொண்டு தயாரித்த உணவுப் பொருட்களை நித்திரைக்கு செல்வதற்கு முன் உண்ணக் கொடுக்க



வேண்டாம். ஏனெனில் அது உடலில் குளுக்கோஸ் சத்தை அதிகரிக்கச் செய்துவிடும். அது நித்திரையை தள்ளி வைத்து விடும்.

பொதுவாக பிள்ளைகள் பகலில் நித்திரை கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு அதிக தூக்கம் வந்தால் அவர்களை 20 நிமிடங்களுக்கு மேல் தூங்க விட வேண்டாம். பகலில் ஆழ்ந்து நித்திரை கொண்டு எழுந்ததும் மிகவும் மந்தமான நிலையில் இருப்பார்கள் சிந்தனையும் செயல்களும் மந்தமாக இருக்கும். நித்திரை கொள்வதற்கு முன்பாக உடலை தளர்த்தும் செயல்களை செய்விப்பதும், நல்ல கதைப் புத்தகங்களை வாசிக்கச் செய்வதும், இதமான வெந்நீரில் குளிக்க செய்விப்பதும். மென்மையான இசையை கேட்கச் செய்விப்பதும், போதியளவு நல்ல தூக்கம் கிடைப்பதற்கான நல்ல வழிமுறைகளாகும். போதியளவு நல்ல தூக்கம் இல்லாவிட்டால் அறிவாற்றல் குறைபாடு மற்றும் ஞாபகத் திறனில் வீழ்ச்சி ஏற்படும்.

எனவே, பொதுவாக தூக்கம் என்பது நமது கற்றுக்கொள்ளும் திறனையும், சிக்கலைத் தீர்க்கும் திறனையும் மேம்படுத்த உதவுகிறது. இது நமது கவனம், படைப்பாற்றல், முடிவெடுக்கும் திறன் ஆகியவற்றை மேம்படுத்துகின்றது.



## மனிதனாய் மீண்டெழுவோம்

பூமியில் தோன்றிய
பலகோடி மக்களில்
பாவி நீ என்ற
பதவியை மட்டும் பெற்றிடாதே
பூவோடு நாரும் மணப்பது போல்
உன்னாலே இவ்வுலகம் மணக்க
மனிதனாக மீண்டெழு

மது போதையில் நீ திழைத்து
மனவேதனை பிறர் கொள்ள
மட வேலைகள் செய்திடாதே
உடற் கூறுகளை அழிக்கும்
உன் தேடலை அடியோடு புதைக்கும்
உயிர்க் கொல்லிகளை புகைத்திடாதே

ஆலமர விழுதாய்
உறவை நாளும் போற்றாது
காலமதன் முன்னேற்றமென்று
கோலம் அதில் கொண்டு - நவீன
சாதனத்தில் நீ தொலைந்து
ஆழப்புதைந்த பாசக்கயிற்றை
வீழ வைத்து சாதித்த சாதனைதான்
என்ன?

பணத்திலே போதை கொண்டு
அதன் தரத்திலே தான்தான் மேதை என்று
மனிதரிடத்திலே உயர் சாதிகூறி
திமிரான நடை
ஏளனப்பார்வை
எகத்தாளப் பேச்சு
இத்தனையும் கொண்டு
நச்சுமரமாய் நீ இருந்தது போதுமடா

முல்லைக்கு தேர் கொடுத்த பாரி போல்
தன் பிள்ளைக்கு உயிர் கொடுத்த தாய்போல்
இல்லை என்று சொல்லாது
பிறர் இன்னலையும் தீர்த்து வை
கன்னலாய் மாறி
உயர்ந்த மனிதனாக மீண்டெழுவாய்

கருவிலே சுமந்து
உனை அழகுருவமாய் வளர்த்து
-இணையில்லா

அறிவுக்கு உரமாய்
கல்வியையும் தந்த
உன் இருகுரவர் - இன்று
ஆச்சிரமத்திலே அரைகுறையாய்
நிற்கின்றனர்

நிறை உணவு
நிஜ அன்பு
நிம்மதியான உறக்கமின்றி
நிற்கதியாய் நிற்கும் நிலை கண்டுமா?
நீ மனிதனாக மீண்டெழவில்லை

நடை பாதையிலும்
நீர் ஓடையிலும்
நில மேடையிலும்
நீங்காத கழிவை
பாங்காக நிரப்பியதால்
இளையதும் முதியதும்
தம் நிலை இழந்து
உயிர் பிரிவதை கண்டுமா?
மானிடா மனிதனாக மீண்டெழவில்லை


வேகமாய் சென்ற வண்டி
வெறுமனே கிடக்குது
தூரத்தில் இரு உயிர்
துயரத்தில் துடிக்குது
ஓடிவந்த ஒருவன் சீ இரத்தமென்று
சினுங்கி நிற்க
ஏன் தம்பி உனக்கு இந்த வீண்
பிரச்சினையென
முன்னால் வந்தவனை பின்னால் ஒருவன்
பிடிக்க

கை கொடுத்து உதவாது
கையடக்க தொலைபேசியில்
கட்சிதமாய் படம் பிடித்து
முகப்புத்தகத்திலே முதலில் பதிவிட்டு போலி
விருதினைப்பெற்ற மானிடா

ஆபத்திற்கு கை கொடுத்து
புகழ் ஆகாயமளவு உயர
உன்னத மனிதனாக மீண்டெழு
உன்னத மனிதனாக மீண்டெழு

ஊரினிலே ஒருத்தன்
ஓங்கி உயர்ந்த மரமாய்
கிளைகள் பரப்பி நிற்க
தீவினை செய்தேனும்
இவனை வீழ்த்த வேண்டும் - என
சகுனம் பார்ப்பான் இன்னொருவன்
இந்நிலை மாறி மறையருள் பருகி
உள்ளத்தில் மனிதாபிமானம் பெருகி
காந்தியாய் பாரதியாய்
உயர்ந்த மனிதனாய் மீண்டெழுவோம்.

*I.L.M.* அன்பாஸ்
பிரதேச செயலகம் - நாவிதன்வெளி



## வன்கொடுமை

புதுயுகம் படைக்க புறப்பட்டாள்
புத்தியுள்ள பெண் தான்
புதுமை காண புதுமை பெண்ணாக
வீறு நடை கொண்டாள்

பாவப்பட்ட பூமியில் பாவிகள்
அதிகம்
பாவை அவள் அறியவில்லை
பாதி வழி சென்றுவிட்டாள்
பாதம் தொடர்ந்து யாரோ
தொடர்வதை உணர்ந்தாள்

கொஞ்சம் பயம் கொந்தளித்தது
மனம்
அஞ்சி நடந்தாள் அங்கம் நடுங்க
கெஞ்சி பார்க்க முயன்றாள்
கஞ்ச நடை நடந்து பக்கம் வந்தான்
பரிதவித்து போனாள்
பார்த்த முகம் போல
பேச முன் பாவி பாய்ந்து
வதைத்தான்

மலர்ந்த மலர் வாடி சருகானது
மண்டியிட்டு கெஞ்சியும்
மனம் மாறாத காமுறன்
கால்களை மரங்களில் கட்டினான்
கைகளை அழுத்தி அழகு சிலை
அவளை அசிங்கமாக்கினான்

வன்கொடுமை என்று வகை
வகையாக வசனங்கள்
வந்து கொண்டிருந்தது
சமூக வலைத்தளங்களில் எல்லாம்

சட்டம் தன் கடமையை செய்ய
காலம் எடுத்தால்
கன்னியர்கள் கண்ணீரும்
கம்பலையுமாக
காட்சி தருவார்கள்
தற்கொலையும் செய்வார்கள்
மனநோயாளியாகவும் மாறுவார்கள்
மாற்றம் விரைவில் வேண்டும்

ஜெனிதா மோகன்
நற்பிட்டிமுனை -02
கல்முனை

# வாழும் கலைஞர் வேல்முருகு இராஜகோபால்

ஏ.எல்.எம்.ஷினாஸ், கே.நீலேந்திரன்



வாழும் கலைஞர் வேல்முருகு இராஜ கோபால் அவர்கள் நாவிதன்வெளி பிரதேசத்திலுள்ள 15ஆம் கிராமம் முதலாம் இலக்க வீட்டினை வசிப் பிடமாகக் கொண்ட வேல்முருகு அமராவதி தம்பதியினருக்கு 1959.05.25ஆம் திகதி மகனாகப் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை தனது கிராமத்திலுள்ள அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தரம் ஐந்து வரையும் ஐந்து தொடக்கம் பத்து வரை துறைநீலாவணை மகா வித்தியாலயத்திலும் கற்றார். 14ஆவது வயதில் பாடசாலைப் பருவத்தில் இருந்தே திருவாசகம் முற்றோதுவதிலும் அதனை மனனம் செய்வதிலும் ஒப்புவிப்பதலிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டார். பாடசாலைக் காலங்களில் திருவாசக முற்றோதல் நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு பாராட்டுதல்களையும் பெற்றுள்ளார்.

பாடசாலைக் கல்வியை இடைநிறுத்திய பின்னர் நாவிதன்வெளி பிரதேசத்தில் வேளாண்மை செய்கையினை முழுநேரத் தொழிலாகக் கொண்டு அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தினைக் கொண்டு தனது பெற்றோர்களுடன் வாழ்ந்து வந்தார். பின்னர் 1959ஆம் ஆண்டு அவரது 21வது வயதில் 15ஆம் கிராமத்தினை சேர்ந்த கணேசன் அருந்ததி என்பவரை திருமணம் செய்து கொண்டார். ஆறு பிள்ளைகளுக்கு தந்தையான இவர் திருவாசகம் முற்றோதுதலில் உள்ள ஆர்வம் காரணமாக 2014ஆம் ஆண்டு நாவிதன்வெளிப் பிரதேசத்தை சேர்ந்த இந்து மதகுருவாகிய சிவ திருச்சிற்றம்பலம் தேவகுமார் ஐயா அவர்களிடம் சென்று இசையுடன் திருவாசகம் ஓதும் முறையினை முறைப்படி கற்று அவரது வழி காட்டலின் கீழ் திருவெம்பா காலத்தில் நாவிதன்வெளி பிரதேசத்தில் உள்ள ஆலயங்களில் தனியாகவும் குழு வாகவும் இணைந்து திருவாசகம் முற்றோதும் நிகழ்வில் ஈடுபட்டு வருகின்னறார்.

இவர் தனது கிராமத்தில் அவரது முன்னோர்களால் ஒரு குடிசை அமைக்கப்பட்டு வழிபாடு செய்யப் பட்டு வந்த முருகன் ஆலயத்தின் தலைவராக 2010ஆம் ஆண்டு மக்களினால் தெரிவு செய்யப்பட்டதும் அவ் ஆலயத்தினை பெரிய ஆலயமாக அமைக்க வேண்டும் என்ற மக்களின் நீண்டநாள் ஆசையினை நிறைவேற்ற கிராம மக்களுடன் இணைந்து பல்வேறு இடங்களுக்கும் சென்று நிதி சேகரித்து குடிசையாக இருந்த ஆலயத்தினை பெரிய ஆலயமாக மிக குறுகிய காலத்தில் கட்டி 2014ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்து மக்களிடம் ஒப்படைத்தார்.

தற்போது அவரது கிராமத்திலுள்ள கண்ணகி அம்மன் ஆலயத்தின் தலைவராக மக்களால் தெரிவு செய்யப்பட்டு அவ் ஆலயத்தின் வளர்ச்சிக்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அதனை விரைவில் கட்டி முடித்து மக்களின் ஆதரவுடன் கும்பாபிஷேகம் செய்ய இருப்பதாகவும் கூறினார்.

15ஆம் கிராமத்தின் ஊர் தலைவர் என்ற வகையில் கிராமத்தில் நடை பெறும் திருமணம் மற்றும் மரணச் சடங்குகள் இந்து சமய கிரியைகளின் படி சரியாக மேற்கொள்ளப் படுகின்றதா? என்பதனை கண் காணித்து அவற்றினை சரியான முறையில் நடைமுறைப்படுத்தி இன்றைய புதிய தலைமுறையினருக்கு வழிகாட்டலாக செயல்பட்டு வருகின்றார்.

தற்போது இவர் நாவிதன்வெளி பிரதேச மத்தியஸ்த சபையின் உறுப்பினராகவும் கண்ணகி அம்மன் ஆலயத்தின் தலைவர் மற்றும் கிராமத்தின் தலைவராகவும் இருந்து மக்களுக்காக சேவை செய்து வருகிறார். இதேபோன்று தொன்று தொட்டு வாழ்ந்து வந்த தமிழர் பாரம்பரியம் மாறாமல் தனது கிராமத்தில் தெரு ஓரம் உள்ள வீட்டின் அருகில் தண்ணீர் தொட்டில் அமைத்து வீதியால் செல்லும் மக்களின் தாகத்தினைப் போக்குவதற்கான சேவையினையும் பல வருடங்களாக செய்து வரும் இவர், தனது மனைவி மகளுடன் மகிழ்சியாக வாழ்ந்து வருகின்றார்.

இவரது கலைப் பயணம் மற்றும் சமூக சேவை இன்னும் தொடர "நாவெளி" படலையைத் தேடி குழுவினர் சார்பில் வாழ்த்துகின்றோம்.